வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 29.04.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 144 | பக்கங்கள் : 16


படங்கள்: ஐ.சிவசாந்தன்

# வடக்கும் ஸ்தம்பித்தது பணிப் புறக்கணிப்பால்

யாழ்ப்பாணம், ஏப். 29

நேற்றைய தினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்சங்கங்களின் அழைப்பின் பேரில் நாடு முழுவதும் பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு மாகாணமும் முற்றாக ஸ்தம்பித்தது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும், நாட்டின் நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வு வேண்டும், எரிபொருட்கள் மற்றும் பொருட்களின்

15

# ஓ.எல்., ஏ.எல். பரீட்சை திகதிகள் வெளியாகின

கொழும்பு, ஏப். 29

இவ்வருடம் இடம்பெறவுள்ள தேசிய ரீதியிலான பரீட்சைகளுக்கான திகதிகளை பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்தது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர

15

# பளை விபத்தில் ஒருவர் மரணம்!

கிளிநொச்சி, ஏப். 29

மோட்டார் சைக்கிளும் கப் ரக வாகனமும் எதிரெதிரே மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

பளை - புதுக்காட்டு சந்திக்கு

15

## ஜனாதிபதியுடனான சந்திப்பு சுயாதீன எம்.பிக்கள் பங்கேற்பர்!

சுதந்திரக் கட்சி நேற்று அறிவித்தது

கொழும்பு, ஏப். 29

பாராளுமன்றில் தனித்து இயங்குவதற்கு தீர்மானித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் 40 பேரும் இன்றையதினம் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்க முடிவு செய்துள்ளனர்.

15

## ரூ. 550 கோடி மதிப்பிலான மருந்துகள் வந்து சேர்ந்தன!

கொழும்பு, ஏப். 29

சுமார் 550 கோடி ரூபாய் (ஒரு கோடியே 60 இலட்சம் அமெரிக்க டொலர்கள்) பெறுமதியான மருந்துப் பொருட்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

இந்த மருந்துப் பொருட்களை இந்தோனேசியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

15

# பணிப் புறக்கணிப்பால் முற்றாக முடங்கியது நாடு

- நாடு முழுவதும் போராட்டங்கள்
- போக்குவரத்து சேவை பாதிப்பு
- வங்கி சேவைகள் நடக்கவில்லை
- பாடசாலைகள் மூடப்பட்டன
- அரச அலுவலகங்கள் இயங்கவில்லை
- வர்த்தக நிலையங்கள் பூட்டு

கொழும்பு, ஏப்ரல் 29

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்சங்கங்கள் நேற்று ஒன்றிணைந்து முன்னெடுத்த பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முற்றாக முடங்கியது. இதேநேரம், பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவாக தொழில் சங்கத் தினர் நாட்டின் அனைத்து நகரங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். பிரதான போராட்டங்கள் அந்தந்த மாவட்டங்களின் பிரதான நகரங்களில் நடைபெற்றன.

15



# போராட்டக்காரர்களால் நிறைந்தது காலிமுகத்திடல்!

கொழும்பு, ஏப். 29

கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டத்தின் 20ஆவது நாளான நேற்று அங்கு போராட்டக்காரர்கள் நிறைந்திருந்தனர்.

அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி காலிமுகத்திடலில் கடந்த 9ஆம் திகதி முதல் போராட்டம் நடைபெற்று வருகின்றது. நேற்று 20ஆம் நாளை போராட்டம் எட்டிய நிலையில், தொழில்சங்கங்

15

# அமைச்சுகளுக்கான விடயங்கள் வர்த்தமானியில் அறிவிப்பில்லை

குழப்ப நிலையில் புதிய அமைச்சர்கள்

கொழும்பு, ஏப். 29

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு ஒரு வாரம் கடந்தபோதிலும், அமைச்சுகளுக்கான விடயதானங்கள் மற்றும் செயல்பாடுகள் உரிய முறையில் இதுவரை வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை.

புதிய அமைச்சரவையின் அமைச்சர்கள் மற்றும் இரா

15

## நகரங்களுக்கு மட்டும் எரிவாயு

கொழும்பு, ஏப். 29

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீளும் வரை நகரங்களுக்கும், அத்தியாவசிய சேவைகளுக்கும் மாத்திரம் எரிவாயு விநியோகிக்கப்படும் என லிட்ரோ எரி

15

## ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தயார்!

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தயாரித்துள்ளார்.

பாராளுமன்றம் கூடியதும் இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபடவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

15

## இப்படியும் நடக்கிறது...!

இது ஒரு சீன நாட்டுக் குட்டிக் கதை.

சீனாவில் ஓர் ஊரில் பத்து விவசாயிகள் இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் தத்தம் நிலங்களில் உழவு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது வானம் இருட்டிக் கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடி இடித்தது.

பயந்துபோன அவர்கள், பக்கத்தில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

வெகுநேரமாகியும் மின்னல் வெட்டுவதும் இடி இடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் வேறு அதிகரித்துக் கொண்டே போனது.

பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயிகளில் ஒருவன் "நம் மிடையே ஒரு மகாபாவி இருக்கிறான். அவனைக் குறி வைத்துத்தான் கடவுள் இடியையும் மின்னலையும் ஏவியிருக்கிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பிவிட்டால் மற்றவர்கள் பிழைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னான்.

மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள்.

இத்தனை பேரில் அந்தப் பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் தீர்ப்பைக் கடவுளிடமே விட்டு விடுவது என்று முடிவாயிற்று. அதன்படி அனைவரும் தத்தம் தொப்பிகளைக் கையில் பிடித்துக் கொண்டு தொப்பியை மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று.

அனைவரும் தத்தம் தொப்பிகளை மழையில் நீட்டினர். பயங்கரமான இடி முழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாகியது.

மற்றைய ஒன்பது விவசாயிகளும் "இவன்தான் பாவி. இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு" என்று கத்திக் கொண்டே, அவன் மேல் பாய்ந்தனர்.

அந்த விவசாயி கெஞ்சிக் கதறி, தான் அப்பாவி என்று மன்றாடினான். மற்றவர் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை பலவந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர். அவன் கதறிக்கொண்டே மழையில் ஓடினான்.

அப்போது அதி உக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி இடி இடித்தது. ஓடிக்கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டான். சற்று நேரத்தில் நிலை திரும்பி, மண்டபத்தைத் திரும்பிப் பார்த்தான்.

மண்டபத்தில் இடி விழுந்து, நொறுங்கிக் கிடந்தது. ஒரு புண்ணியவானின் புண்ணிய பலத்தில் தப்பித்திருந்த ஒன்பது விவசாயிகளும் அவனை வெளியே தள்ளிப் பாதுகாப்பை இழந்து பரிதாபமாகக் கருகிச் செத்துப் போய்விட்டனர்.

இந்தக் கதைக்கும் நமது நாட்டில் நடக்கின்ற சம்பவங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு கொள்கையளவில் ஜனாதிபதி இணங்கியிருக்கிறார். இந்த விடயத்தை, பொதுஜன பெரமுன அரசிலிருந்து வெளியேறியவர்களையும் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களையும்கொண்ட பதினொரு கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

இடைக்கால அரசு - அல்லது சர்வகட்சி அரசு என்ற விடயம் அண்மைய நாட்களில் பேசுபொருளாக இருந்து வருகின்றபோதிலும், ஜனாதிபதி முதல் தடவையாக அப்படியோர் அரசை அமைக்க இப்போது இணங்கியிருக்கிறார். இதற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் நூற்றுபதின்மூன்று உறுப்பினர்களுடன் வாருங்கள், ஆட்சியமைக்க அனுமதிக்கிறேன் என்று சொல்லியிருந்த ஜனாதிபதி, இப்போது அப்படியில்லாமல், சர்வகட்சி அரசுக்கு தயார் என்றிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற இந்த பதினொரு கட்சிகளும் ஏற்கனவே கடந்த இரண்டு ஆண்டுகாலமாக இந்த அரசாங்கத்தில் இடம்பெற்றிருந்தவைதான். அவர்களுக்கு வெளியே இருந்தவர்கள், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் காங்கிரஸ், தமிழ் தேசிய மக்கள் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்பொக்கு கூட்டணியினர்தான். இவர்களிலும், முஸ்லிம் கட்சிகளும், தமிழ் முற்போக்கு கூட்டணியும்கூட ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரிலேயே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி இடைக்கால அரசில் தாம் இடம்பெறப்போவதில்லை என்பதை உறுதிபட தெரிவித்துவிட்டது. ஜே. வி. பியும் அவ்வாறே. தமிழ் கட்சிகள் அரசில் இடம்பெறமாட்டாது என்பது தெரிந்ததே.

அப்படியெனில், மீண்டும் அதே பொதுஜன பெரமுனவின் பழைய முகங்களைக்கொண்டு புதிய சர்வகட்சி அரசு?

ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுப்பதற்கு முதல்நாள் இரவு, ராஜபக்ஷ சகோதரர்கள் அலரி மாளிகையில் கூடி, நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து பல மணி நேரமாக விவாதித்திருந்தனர் என்று செய்திகள் வந்திருந்தமையை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

மறுநாள், இவ்வாறு சர்வகட்சி அரசுக்கு தயார் என்று ஜனாதிபதி அறிவித்திருக்கிறார் என்றால், அது அவர்களின் அந்த குடும்ப ஆலோசனைக்கு பின்னரான முடிவு என்பதும் புரிந்து கொள்ளக்கூடியதே.

தற்போதைய நெருக்கடியைத் தணிக்க, பந்தை மறுதரப்பிடம் விட்டிருக்கிறார்கள் என்றே உணரமுடிகின்றது.

அது சரி, சர்வகட்சி அரசு என்றால், அது பொதுஜன பெரமுனவும் சேர்ந்ததாகத்தானே இருக்க வேண்டும்?

அப்படியெனில், சர்வகட்சி ஆட்சியில் பெரமுனவில் இருந்து யாரை நியமிப்பது என்பதையும் பெரமுன மட்டுமே முடிவெடுக்க முடியும். அதுவும், மஹிந்தவை தவிர்த்து வேறு ஒருவரை முன்நிறுத்தப்போவதில்லை.நமது பொருளாதார சிக்கலை விட, சர்வகட்சி அரசுக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதே அதைவிட பெரிய சிக்கலாக இருக்கும் என்பது ராஜபக்ஷக்களுக்கு தெரியாதா என்ன?

- ஊர்க்குருவி

# அமெரிக்க தூதரக வாகனம் மோதி வவுனியாவில் இளைஞன் காயம்!

வவுனியா, ஏப். 29

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப் பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற மூன்று சொகுசு வாகனங்கள் தாண்டிக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது நகர் பகுதியிலிருந்து தாண்டிக்குளம் நோக்கிப் பிரதான வீதியிலிருந்து இடது கரைக்கு சைக்கிளில் கடக்க முற்பட்ட இளைஞன் மீது மோதியே இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றது.விபத்துக்குள்ளான சொகுசு வாகனத்தில் அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பயணம் செய்தனர் என தெரிய வந்தது.

குறித்த விபத்தில் திவாகர் (வயது -19) கூமாங் குளத்தை சேர்ந்த இளைஞர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ)

## அருளாசியுரை

யாழ்ப்பாணம், ஏப். 29

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை நடைபெறுகிறது.

இதில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் கடவைத்தரை ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சபா. சந்தனக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு இடம்பெறவுள்ளது. (ஐ)

## 29 தொற்றாளர்கள்

கொழும்பு, ஏப். 29

நாட்டில் நேற்று 29 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 63 ஆயிரத்து 272ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 682 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# கடந்த வருடத்தில் மட்டும் 410 எச்.ஐ.வி தொற்றாளர்கள்

கொழும்பு, ஏப். 29

2021 இல் நாட்டிலிருந்து இதுவரை 410 எச்.ஐ.வி நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2019, 2020 இல் இதேகாலப் பகுதியில் பதிவான எச்.ஐ.வி நோயாளர்களின் ஒப்பிடுகையில், தற்போது பதிவான எண்ணிக்கை குறைவாகும்.

இலங்கையில் தற்போது சுமார் 3,700 பேர் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் வைத்திய அதிகாரி தர்ஷனி மல்லி காராச்சி தெரிவித்தார்.

எச்.ஐ.வி வைரஸை நாங்கள் கண்டறிந்து கிட்டத்தட்ட 41 ஆண்டுகள் ஆகிறது. இந்த எச்.ஐ.வி வைரஸ் உலகம் முழுவதும் ஒரு தீவிரமான பிரச்சினையாக மாறியுள்ளது. உலகில் கிட்டத்தட்ட 79 மில்லியன் மக்கள் பயங்கரமான வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகில் கிட்டத்தட்ட 36 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். இந்த வைரஸால், இன்னும் மக்கள் தொற்று நோய்க்கு ஆளாகிறார்கள்.

இருப்பினும், எச்.ஐ.விக்கு பயனுள்ள சிகிச்சை எதுவும் இல்லை. ஆனால் சரியான மருத்துவ கவனிப்புடன், பெரும்பாலானவர்கள் ஆறு மாதங்களுக்குள் வைரஸைக் கட்டுக்குள் கொண்டு வருகிறார்கள் என்று அவர் கூறினார்.

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், புதிதாக பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித்துள்ளது.

கோவிட்-19 தொற்று நோயை எதிர்கொள்ளும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, எச்.ஐ.வி சோதனை சிறிது காலம் நடக்கவில்லை.

பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடுபவர்கள், ஊசி மருந்துகளை உட்கொள்பவர்கள், கடலோரப் பணியாளர்கள், சிறைக் கைதிகள் ஆகியோருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படும் அபாயம் அதிகம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

எச்.ஐ.வி பரிசோதனைக்கு உட்படுத்த விரும்பும் எவரும் ணறற.மஹெற4ளரசந.டம ஐப் பார்வையிடுவதன் மூலம், ஒன்லைன் ஊடாக பரிசோதனைகளிற்கான முன்பதிவுகளை மேற் கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு பொதுமக்கள் 0112 667 163, 0703 633 533 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், 0716 379 192 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு சுய பரிசோதனை கருவிகளையும் வீடுகளுக்கு பெற முடியும். (அ)

# வீதியில் ரயர் எரித்த இரு இளைஞர்கள் கைது!

வவுனியா, ஏப். 29

வவுனியா செட்டிக்குளம்-நேரியகுளம் வீதியில் ரயர் போட்டு எரித்து எதிர்ப்பு தெரிவித்த இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி, பிரதமர் அரசாங்கத்தை பதவி விலகக் கோரி நாடு பூராகவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்சங்கங்கள் இணைந்து நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையிலேயே வவுனியா, செட்டிக்குளம் - நேரிய குளம் வீதியில் உள்ள வீரபுரம் பகுதியில் வீதியில் ரயர் போட்டு எரித்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பொது வீதிக்கு சேதத்தை ஏற்படுத்தியதாக வீரபுரம் மற்றும் காந்தி நகர் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வாக்கு மூலங்களை பதிவு செய்த பின் எச்சரிக்கப்பட்டு அவர்களை விடுவித்தனர். இராசேந்திர குளம் பகுதியில் உள்ள ஆடைத் தொழில்சாலையில் கடமையாற்றும் இளைஞர் உள்ளிட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
29.04.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# 2009 பின்னரான இலங்கைத் தீவு?

ஆழமாக பார்த்தால், 2009இற்கு பின்னரான இலங்கைத் தீவு, ஒரு ஸ்திரமற்ற நிலைக்குள்ளேயே ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஸ்திரமான அரசாங்கம் என்பது, வெறுமனே பாராளுமன்றத்தில் பலமாக இருப்பது மட்டுமல்ல. சர்வதேச அளவிலும் நன்மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் நோக்கினால், 2009இற்கு பின்னர் ஆட்சியை அலங்காரித்த மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் பலமாக இருந்த போதிலும், அவரால் இலங்கையின் சர்வதேச தரத்தைப் பாதுகாக்க முடியவில்லை. தொடர்ந்தும் சர்வதேசளவில் இலங்கை நெருக்கடிக்குரிய நாடாகவே நோக்கப்பட்டது. மனித உரிமைகளையும், ஜனநாயக விழுமியங்களையும் மதிக்காத ஓர் அரசியல் தலைவராகவே மஹிந்த ராஜபக்ஷ நோக்கப்பட்டார்.

2012இல் இலங்கைமீதான முதலாவது அமெரிக்க பிரேரணை கொண்டுவரப்பட்டது. இந்தப் பிரேரணையை பொறுப்புடன் அணுகியிருந்தால், நிலைமைகள் வேறுவிதமாக அமைந்திருக்கலாம். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து, அரசியல் அரங்குக்கு வந்த எந்தவொரு தமிழ்த் தேசிய கட்சிகளும், தனிநாட்டைக் கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வையே, கோரியிருந்தனர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவோ, யுத்தத்தில் வெற்றிபெற்ற பண்டைய கால அரசர்களை போன்றே நடந்து கொண்டார். சிங்களவர்கள் வெற்றி பெற்றவர்கள் - தமிழர்கள் தோல்வியடைந்தவர்கள் - என்னும் மனோ நிலையிலேயே நடந்து கொண்டார். இதன் விளைவாகவே, சர்வதேசளவில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை ஒரு தொடர் பேசுபொருளானது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவோ, சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் துணைகொண்டு அனைத்து சவால்களையும் வெற்றிகொள்ளலாம் என்னும் இறுமாப்பில் இருந்தார்.

2019இல், மீளவும் ராஜபக்ஷக்களுக்க வாய்ப்புக் கிடைத்த போது, முன்னைய தவறுகளிலிருந்து எதனையும் சீர்தூக்கி அணுகும் நிலையில் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இருந்திருக்கவில்லை. பௌத்த - சிங்கள தேசியத்தின் மூலம் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளலாம் என்னும் நிலையில்தான், அவரின் அனைத்து, அணுகுமுறைகளும் இருந்தன. ஆனால், விடுதலைப் புலிகளை வீழ்த்திவிட்டால், அனைத்து பிரச்னைகளும் முடிந்துவிட்டதென்னும் சிங்கள - பௌத்த தேசியத்தின் மாயாஜால அரசியல் இன்று படு தோல்வியடைந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளில்லாத நாட்டில், சிங்கள - பௌத்த தேசியத்தால், நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல முடியவில்லை. விடுதலைப் புலிகள் பலமாக இருக்கும் வரையில், விடுதலைப் புலிகளை மையப் படுத்தியே தெற்கின் அரசியல் திட்டமிடப்பட்டது. ஓர் எதிரி இருக்கின்றார் - அந்த எதிரியை வீழ்த்துவதே எங்களுக்கு முன்னாலுள்ள இலக்கு என்னும் அடிப்படையில்தான், சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்துமே செயல்பட்டிருந்தன. சர்வதேச அரங்குகளிலும் தங்களை பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்னும் அடிப்படையிலேயே முன்னிறுத்தினர். அதில், வெற்றியும் பெற்றனர். ஏனெனில், சர்வதேசளவில் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அனைத்தையும் ஒரே தராசில், போட்டு நிறுக்கும் போக்கே காணப்பட்டது. முக்கியமாக, பின்லேடனின் அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பின்னரான சூழலில், அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம், ராஜபக்ஷக்களின் வாயில் பழம் நழுவி விழுந்த கதையானது.

இவ்வாறானதொரு சூழலில்தான் விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவத்தால் வீழ்த்த முடிந்தது. ஆனால், விடுதலைப் புலிகள் இல்லாத நாட்டை - முன்நோக்கி கொண்டு செல்வதற்கான, எந்தவோர் ஆக்கபூர்வமான திட்டங்களும் ராஜபக்ஷக்களிடம் இருக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான், நாடு தொடர்ந்தும் அரசியல் ஸ்திரமற்ற சூழலுக்குள் மட்டுமே சிக்கிக்கிடக்கின்றது. இன்னும் இந்த நிலைமை அதிகரிக்குமே தவிர, குறைவடையப் போவதில்லை.

# ‘வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்ந்த’ நிலையில் மஹிந்த !

**அலசுவது இராஜதந்திரி**

அரசியலில் பொதுஜன பெரமுன அரசு மேலோங்கியபோது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உதவி ஒத்தாசையோடும் அவரின் பின்புலத்துடனும் அரசியலுக்குள் நுழைந்த பலர் இன்று அவரின் இராஜிநாமா காலத்தின் தேவையாக இருக்கின்றதென்பதை வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே, தற்போதைய அரசில் அமைச்சர்களாக அங்கம் பெற்றவர்கள் பலர் ஜனாதிபதிமீதும் பிரதமர்மீதும் மிக அதிருப்தி கொண்டவர்களாக தமது கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இவர்களில் வாசுதேவ நாணயக்கார , உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ, டலஸ் அழகபெரும போன்றவர்கள் முக்கியமானவர்கள். அரசிலிருந்து விலகி சுயாதீனமாக செயல்படும் பதினொரு பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் விலகிவிட வேண்டுமென்பதில் மிக உறுதியாக இருக்கின்றனர்.

இதற்கு முக்கியமான காரணமென்னவெனில் நாடளாவிய ரீதியில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்துள்ளன. பெரும்பாலான மக்கள் தற்போது அரசை வெறுக்கும் அறிகுறிகளே தென்படுகின்றன. இத்தகைய பின்புலத்தில் தமது சொந்த தொகுதிகளிலுள்ள மக்கள் முன்பாக சென்று நிற்கும்போது அவர்களுக்குப் பதிலளிக்க வேண்டியவர்களாக ஆளும் கட்சியிலுள்ள பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

இதன் வெளிப்பாடாகவே அவர்கள் ஆட்சியாளர்களை பாதுகாக்க முற்படாது தமது கருத்துகளை முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகம் முன்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக வேண்டுமென கடந்த பதினெட்டு நாட்களுக்கும் மேலாக ஆர்ப்பாட்டம் இடம்பெறுகின்றது. அதேவேளை ஜனாதிபதி செயலகத்துக்கு ஏறத்தாழ ஒரு மைல் தெற்கே அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகை வரை காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் விரிவடைந்துள்ளது. எனவே, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் அலுவலகங்கள், இல்லங்களுக்கு முன்பாகவே ஆர்ப்பாட்டங்கள் பூதாகரமடைந்துள்ள நிலையில் தத்தமது தொகுதிகளில் மக்கள் முன்பாக தோன்ற முடியாத அசௌகரிய நிலை ஏற்படும் என்பதை ஆளும் கட்சியிலுள்ள பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் அறிந்துள்ளதோடு, தமது அரசியல் நலன்களை பாதுகாப்பது குறித்து சிந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

இத்தகைய நிலையை நோக்கும்போதே அரசியலில் நிரந்தர சகவாசமும் இல்லை நிரந்தர வெறுப்புணர்வும் இல்லை எனக் கூறப்படுவதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடிகின்றது.

பிரதமர் மஹிந்தவினால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டு முக்கிய அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்ட பலர் தற்போது இன்றைய அரசின் போக்கைக் கடுமையாக



விமர்சிக்க ஆரம்பித்திருப்பதோடு ஓர் இடைக்கால அரசு உருவாக்கப்பட்டு பிரதமர் மஹிந்த குறிப்பிடுவது போல அந்த இடைக்கால அரசுக்கும் அவரே பிரதமர் என்ற நிலை ஏற்படுமானால் புதிய ஆட்சியதிகார கட்டமைப்பை கொண்டுவருவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதே பங்காளிக் கட்சிகளின் அபிப்பிராயமாக இருக்கின்றது.

இடைக்கால அரசும் அதில் மஹிந்த ராஜபக்ஷவே மீளவும் பிரதமர் என்ற நிலை ஏற்படுமானால் “புதிய மொந்தையில் பழையகள்“ என்ற நிலையே ஏற்படும் என்பதே அரசிலுள்ள அதிருப்தியாளர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது.

இதேவேளை அமெரிக்க காங்கிரஸில் இலங்கை தொடர்பான நகர்வொன்றை சமர்ப்பிக்க காங்கிரஸ் உறுப்பினரான ஸ்டீவன் ஹோர்ஸ் போர்ட் (Steven Horsford) முன்வந்துள்ளார்.


இலங்கையை பூர்வீகமாகக் கொண்டு அமெரிக்க பிரஜா உரிமை பெற்றவர்கள் சட்டவிரோதமாக சம்பாதித்து அமெரிக்காவில் சொத்துக்களை வாங்கியமை தொடர்பாகவே விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்ற புதிய நகர்வை ஸ்டீவன் ஹோர்ஸ் போர்ட் முன்வைத்துள்ளார்.

காங்கிரஸ் உறுப்பினர் ஸ்டீவன் ஹோர்ஸ் போர்ட் வெளியிட்டுள்ள கருத்தில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு பலம் வாய்ந்த அரசியல் குடும்பமே காரணமெனவும் தெரிவித்துள்ளார்.

கூடவே, இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் அதுசார்ந்த நிதி நெருக்கடி போன்றவை குறித்த உத்தேச அமெரிக்க காங்கிரஸ் விசாரணை அமெரிக்க அரசின் நியாயாதிக்கத்தின் கீழேயே இடம்பெறவேண்டுமெனவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலை தொடர்பாக அதனோடு தொடர்புபட்ட அமெரிக்காவில் இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட பிரஜைகள் விசாரிக்கப்பட வேண்டுமென காங்கிரஸ் உறுப்பினர் ஸ்டீவன் ஹோர்ஸ்போர்ட் குறிப்பிட்டுள்ளதை நோக்கும் ஆளுந்தரப்பில் உச்சத்திலுள்ள பெருந்தலைகள் பலர் அமெரிக்க காங்கிரஸ் விசாரணைக்குட்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 28 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 16
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
நண்பர்களின் பணத்தேவையைத் தீர்த்து வைப்பீர்கள்.எதிர்பாராத நற்செய்தி ஒன்று வரும். நட்பு வட்டம் விரியும்.உங்களுக்கு தேவையான புதிய விஷயத்தை கற்றுக்கொள்வீர்கள்.

**இடபம்**
சிறு செயல்கள் மூலம் மற்றவருக்கு நன்மை செய்வீர்கள்.நண்பர்களின் வழிகாட்டுதலால் ஜெயிப்பீர்கள். பயம் தீரும்.குழந்தைகளைப் பற்றி இருந்து வந்த கவலைகள் மறையும்.

**மிதுனம்**
மன அழுத்தத்தினால் நிம்மதியைக் குலைத்துக் கொள்ளாதீர்கள்.உங்களின் வழிகாட்டுதலால் பலர் நன்மை அடைவர்.முந்தைய உழைப்பிற்கான பலன் இன்று கைக்கு கிடைக்கும்.

**கடகம்**
பிறரிடம் நன்றி உணர்ச்சியை எதிர்பார்த்து ஏமாற்றம் அடையாதீர்கள்.தந்தையின் ஆசி கிடைக்கும். தொழிலில் லாபம் பெருகும்.மற்றவர்களிடம் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

**சிம்மம்**
உங்களின் முயற்சியால் பணியிடத்தில் பாராட்டுக் கிடைக்கும்.அதிர்ஷ்டம் அதிகரிக்கும். தோற்றத்தில் கவர்ச்சி கூடும்.குடும்பத்தில் உள்ள பெரியோருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி**
பிறரை நம்பிய செயல் ஒன்று வெற்றிகரமாக நிறைவேறும். தாய்மாமனின் உதவி கிடைக்கும். நன்மை அதிகரிக்கும்.ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். நிம்மதி கிடைக்கும்.

**துலாம்**
திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்படும். குடும்பத்தினர் உங்களை பாராட்டுவர். தடைப்பட்டு வந்த வேண்டுதல் இன்று நல்லபடியாக நிறைவேறும். பேச்சினால் ஏற்பட்ட சிரமங்கள் நீங்கி மகிழ்ச்சி கிடைக்கும்.

**விருட்சிகம்**
ஆசிரியரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். உற்சாகமான நாள். பணியிடத் தொல்லைகளை சமாளிப்பீர்கள். நண்பர்கள் பாராட்டுவர்.உங்களது சேவை பலராலும் இன்று பராட்டப்பெறும்.

**தனுசு**
உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை பெறுவீர்கள். நிதி நிலை சீராகும். குழந்தைகளால் நிம்மதி ஏற்படும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். பணியிடத்தில் உங்களின் தகுதிக்கேற்ப பதவி உயர்வு கிடைக்கும்.

**மகரம்**
வங்கிக்கணக்கில் இருப்புத்தொகை உயரும். கடன் தீரும். துயரங்கள் காணாமல் போகும். யோகமான நாள்.வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். நற்பெயர் வாங்குவீர்கள்.

**கும்பம்**
பேச்சினால் எதிலும் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். இன்றைய செயலில் நன்கு யோசித்து முடிவு எடுங்கள். ஆரோக்கியம் பற்றி இருந்து வந்த பயம் நீங்கும்.

**மீனம்**
யாருக்கும் வாக்குக்கொடுக்காதீர்கள். அமைதி ஏற்படும் நாள். பணியிடத்தில் எதிர்பாராத நன்மை வரும்.உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

## பேரறிவாளன் விடுதலை:

# அதிகாரம் யாருக்கு என்பதை தெளிவாக அறிவிக்கக் கெடு!



சென்னை, ஏப். 29

பேரறிவாளன் விடுதலை தொடர்பாக முடிவெடுப்பதற்கான உரிய அதிகாரம் கொண்டது மத்திய அரசா? மாநில அரசா? என்ற சர்ச்சைக்கு மத்தியில் அவரது விடுதலை குறித்து தெளிவான முடிவை ஒரு வார காலத்தில் இந்திய மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

பேரறிவாளன் விடுதலை தொடர்பாக யார் முடிவெடுப்பது? என்ற குழப்பத்துக்குள் செல்லாமல் அவரை ஏன் நீதிமன்றமே விடுதலை செய்யக்கூடாது எனவும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

தன்னை விடுதலை செய்யக்கோரி பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நீதிபதிகள் எல். நாகேஸ்வரராவ், பி. ஆர். கவாய் அடங்கிய அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோதே நீதிபதிகள் இவ்வாறு கேள்வி எழுப்பினர்.

பேரறிவாளன் தரப்பில் மூத்த வழக்குரைஞர் கோபால் சங்கரநாராயணன் முன்னிலையாகி, பேரறிவாளன் விடுதலை தொடர்பாக, தமிழ்நாடு அமைச்சரவை பரிந்துரைத்தும் ஆளுநர் இதுதொடர்பாக முடிவெடுக்கவில்லை என தெரிவித்தார்.

அத்துடன், 32 ஆண்டுகால சிறை வாழ்க்கையில் பேரறிவாளன் நன்னடத்தையுடனும், முன்மாதிரி நபராகவும் செயல்பட்டுள்ளார். எனவே, அவரை விடுதலை செய்ய வேண்டும் என கோரினார்.

இதையடுத்து நீதிபதிகள், யார் விடுதலை செய்ய வேண்டும் என்ற குழப்பத்திற்கிடையில் ஏன் பேரறிவாளன் சிக்கிக்கொள்ள வேண்டும்? நாமே ஏன் விடுதலை செய்யக்கூடாது? என தமிழ்நாடு அரசு தரப்பு வழக்கறிஞர் ராகேஷ் துவிவேதியிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த துவிவேதி, இந்த விவகாரத்தில் முடிவெடுப்பதற்கான உரிய அதிகாரம் கொண்ட அரசு எது? என்பதுதான் இங்கு சர்ச்சையாக உள்ளது என்றார்.

இதையடுத்து மத்திய அரசு சார்பில் முன்னிலையான மேலதிக சட்டமா அதிபர் நட்ராஜ், அமைச்சரவையின் தீர்மானத்தை குடியரசு தலைவருக்கு ஆளுநர் அனுப்பியுள்ளார். இதுகுறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதற்கு, இதுகுறித்து ஆளுநர் முடிவு எடுக்காமல், எந்த விதியின் அடிப்படையில் ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பியுள்ளார்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அமைச்சரவையின் தீர்மானத்தை குடியரசு தலைவருக்கு அனுப்புவதற்கான அதிகாரம் ஆளுநருக்கு இருக்கிறதா?" எனவும் அவர்கள் கேட்டனர்.

ஆளுநருக்கு அதிகாரம் இல்லாத விவகாரம் அவர் பார்வைக்கு அனுப்பப்பட்டால், அதை அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் அதிகாரம் உள்ளது. மாறாக, ஆளுநர் முடிவெடுத்திருந்தால், தன் அதிகாரத்தை மீறுவது போன்றதாகும் என மேலதிக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களின் பின்னர் இந்த வழக்கு விசாரணையை அடுத்த புதன்கிழமைக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். இந்த ஒருவார காலத்தில் பேரறிவாளன் விடுதலை குறித்து தெளிவான முடிவை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதேவேளை, இந்த விவகாரத்தில் யார் முடிவெடுக்க வேண்டும் என்பது குறித்தும் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசுக்கும் நீதிபதிகள் பணிப்புரை விடுத்தனர்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேர் தற்போது தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

பேரறிவாளன் 32 ஆண்டுகளாக இந்த வழக்கில் சிறையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள் எல். நாகேஸ்வரராவ், பி.ஆர். கவாய் அடங்கிய அமர்வு, அவருக்கு பிணை வழங்கி கடந்த மாதம் உத்தரவிட்டது. பேரறிவாளனின் 32 ஆண்டுகால சிறைவாசத்தில் அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

ராஜீவ் கொலை வழக்கில் தற்போது தண்டனை அனுபவித்துவரும் 7 பேரில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தூக்கு தண்டனை 2014ஆம் ஆண்டில் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முழுப்பூசணியை சோற்றில் மறைக்கிறார் பிரதமர் மோடி!

## ஸ்ராலின் குற்றச்சாட்டு



சென்னை, ஏப். 29

பெற்றோல், டீசல் விலை தொடர்பாக பிரதமர் பேசியமை முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் உள்ளதாக தமிழக முதல்வர் மு. க. ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று மீண்டும் அதிகரிப்பது தொடர்பாக, மாநில முதல்வர்களுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, மக்கள் மீதான பெற்றோல், டீசல் விலை உயர்வு சுமையை குறைப்பதற்காக, கடந்த நவம்பர் மாதம் மத்திய அரசாங்கம் அவற்றின் மீதான உற்பத்தி வரியைக் குறைத்தது.

இதேபோன்று, மாநிலங்களும் உள்ளூர் வரியை குறைத்து மக்களுக்கு அந்தப் பலன் போய் சேர உதவ வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டது. சில மாநிலங்கள் வரியை குறைத்தன. ஆனால், சில மாநிலங்கள் மக்களுக்கு எந்தப் பலனையும் வழங்கவில்லை.

இதன் காரணமாக, அந்த மாநிலங்களில் பெற்றோல், டீசல் விலை தொடர்ந்து அதிகமாக உள்ளது. இது இந்த மாநிலங்களின் மக்களுக்கு செய்கிற அநீதி மட்டுமல்ல, இது மற்ற மாநிலங்களிலும் தீங்கு ஏற்படுத்துகிறது.

மாநில அரசுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டிய வரியைக் குறைத்து, மாநில அரசுக்கு தர வேண்டிய வரியை குறைக்காமல், கடுமையாக வரியை உயர்த்தி மக்கள் மீது சுமையை திணித்து அதன் மூலம் கிடைக்கக்கூடிய கோடிக்கணக்கான ரூபாய் வருவாயை முழுவதும் தனது ஆக்கி கொண்டது மத்திய அரசு - என்றார். (ஐ)

# பொது முடக்கத்தினால் நேற்று முற்றாக முடங்கிய வவுனியா!

## மக்களின் இயல்பு வாழ்க்கை பதிப்பு






வவுனியா, ஏப். 29

**பொருட்களின் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்று கோரியும் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு வவுனியாவில் பூரணஆதரவு வழங்கப்பட்டது.**

காமினி சிங்கள மகாவித்தியாலயத்திற்கு முன்பாக ஒன்றிணைந்த கூட்டுத் தொழிற்சங்கம் அங்கிருந்து மாவட்ட அபிவிருத்திக்குழு அலுவலகத்திற்கு முன்பாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டத்தை மேற்கொண்டது. இதன்போது அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. மதிலில் அரசுக்கு ஆதரவு வழங்காதே என்ற வசனம் தமிழ் மற்றும் சிங்களத்தில் எழுதி , கறுப்புக் கொடியை அலுவலகத்தில் பறக்கவிட்ட போராட்டக்காரர்கள் கண்டி வீதி வழியாக பேரணியாக தமது போராட்டத்தை முன்னெடுத்தனர் .

பின்னர் அங்கிருந்து கொரவப்பொத்தானை வீதி வழியாக பேரணியாகச் சென்று பசார் வீதி வழியாக கண்டி வீதியில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் அலுவலகத்தை முற்றுகையிட்டு கோசம் எழுப்பினர்.

குறித்த அலுவலகங்களுக்கு முன்பாக அரசுக்கு ஆதரவு வழங்காதே என்ற பதாதைகளை காட்சிப்படுத்தியதுடன் அலுவலகத்தின் சுவர்களில் அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பொறித்ததுடன் அவரது அலுவலகத்தில் மஸ்தானின் படம் பொறித்து காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாதாகையிலும் அர சுக்கெதிரான வாசகங்களை எழுதினர்.

இதேவேளை, நேற்று போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் பல வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடப்பட்டதுடன், தினச்சந்தை, பாடசாலைகள், அரச திணைக்களங்கள் வங்கிகள் ஆகியவற்றின் செயற்பாடுகள் முற்றாக முடங்கின.

நகருக்கு வருகை தந்த பொதுமக்களின் எண்ணிக்கை நேற்று வெகுவாக குறைவடைந்து காணப்பட்டது. போக்குவரத்து சேவைகளும் ஸ்தம்பிதமடைந்தன.

பிற்பகல் 2 மணி வரை இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் தபால் திணைக்கள ஊழியர்கள், வங்கி ஊழியர்கள்,ஆசிரியர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் என பலர் கலந்து கொண்டனர். ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரக்கு எதிரான கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (அ)




# சுகாதாரத்துறை சம்மேளனம் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஏப். 29

அரசாங்கத்த்திற்கு எதிராக சுகாதாரதுறைசார்ந்த தொழிற சங்கங்களின் சம்மேளனத்தினால் வவுனியாவில் ஆர்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வவுனியா வைத்தியசாலையில் இருந்து பேரணியாக சென்று வைத்தியசாலை சுற்றுவட்டத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அரசாங்கத்தில் இருந்து வெளியேறு, பொருட்களின் விலையை குறைக்க வேண்டும், எரிபொருளின் விலையேற்றத்தை குறை போன்ற பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்ததோடு அரசாங்கத்துக்கு எதிரான கோசங்களையும் எழுப்பினர்.இத் தொழிற்சங்கங்களின் ஆர்ப்பாட்டத்தில் வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் தாதியர்கள், சிற்றூழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)



# இலங்கை வங்கி ஊழியர் சங்கம் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 29

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் தற்போது நாட்டில் உள்ள பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் சார்ந்ததாக தொழிற்சங்க நடவடிக்கை நேற்று யாழ். மத்திய பஸ் நிலைய முன்றலில் இடம் பெற்றது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரால் நாடு முழுவதும் தற்போதுள்ள அரசுக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டநிலையில் இலங்கையில் உள்ள அனைத்து ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளினால் இன்றைய தினம் பொது மக்கள் நலன்சார்ந்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு தற்போதுள்ள அரசாங்கம் செவி சாய்க்காத பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர். (அ-03)

# அமெரிக்க டொலர் 360 ரூபா!

கொழும்பு, ஏப். 29

அனுமதிபெற்ற வணிக வங்கிகளில் நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 360 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி டொலரின் விற்பனை பெறுமதி 350 ரூபா 49 சதமாகவும் கொள்முதல் விலை 337 ரூபா 82 சதமாகவும் பதிவாகியிருந்தது. (அ)

# இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் சர்வதேச கல்வியகம் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 29

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் சர்வதேச கல்வியகத்துடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை மற்றும் பலரும் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் சர்வதேச கல்வியகத்தின் உயர்நிலைக் குழுவுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, பள்ளிசெல் பிள்ளைகள் எதிர்நோக்கும் சவால்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அவலநிலை, கல்விக்கான அதிகரித்த செலவீனம், போக்குவரத்து சிரமங்கள், அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு, வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள மக்களின் துயரநிலை போன்ற பல்வேறு விடங்கள் குறித்து எடுத்தியம்பப்பட்டுள்ளது.

சூம் மூலமாக நடைபெற்ற இந்தக் கருத்துப் பகிர்வில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகரும், சர்வதேச விவகாரங்களுக்கான இயக்குநருமான த.மகாசிவம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகரும் சர்வதேச பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளருமான திருமதி. ஈ.ஜெ.மகேந்திரா, சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன், சங்கத்தின் சிரேஸ்ட துணைப் பொதுச்செயலாளர் சி.சசிதரன், சங்கத்தின் வடக்கு மாகாணச் செயலாளர் ஜெ.நிஷாகர், சங்கத்தின் மத்திய மாகாணச் செயலாளர் ஏ.பாலசிங்கம் ஆகியோரோடு பெண்கள் வலையமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கல்விக்காக பெண்களின் பங்களிப்பு அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் உரையாடப்பட்டதோடு, பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவர்களின் போசாக்கு நிலைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)





# மன்னாரிலும் நேற்று இயல்புநிலை பாதிப்பு

மன்னார், ஏப். 29

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் விதமாக மன்னாரில் நேற்று வியாழக்கிழமை அரச வங்கிகள் தபாலகம் உட்பட பல அலுவலகங்கள் மூடப்பட்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகள் பெரும்பாலனவை நடைபெறவில்லை. சில பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவும் குறைந்து காணப்பட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அதே நேரம் பஸ் சேவைகள் வழமைபோல் இடம் பெற்றன. வர்த்தக நிலையங்களும் வழமைபோல் திறந்திருந்தன.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அரச வங்கிகள் ஊடாகவும் தபால் அலுவலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் சேவைகள் இடை நிறுத்தப்பட்டமையால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். (அ)

# பிரதமர் பதவி துறப்பதற்கு சிலர் தடையாக உள்ளனர்!

## ஆளுங்கட்சி எம்.பி. தகவல்



கொழும்பு, ஏப். 29

“நாட்டுக்காக பிரதமர் பதவியை துறப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ தயாராகவே இருக்கின்றார்.

எனினும், அந்த முடிவை எடுப்பதற்கு பிரதமருக்கு சிலர் தடையாக உள்ளனர் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.” - இவ்வாறு ஆளுங்கட்சி பாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார்.

ஊழல், மோசடிகளில் இருந்து தம்மை பாதுகாக்க முற்படும் தரப்பே, இவ்வாறு பிரதமருக்கு தடையை ஏற்படுத்தி வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வகட்சி அரசமைப்பதற்கு வழிவிட்டு, பிரதமர் பதவி விலகாவிட்டால், ஆளுங்கட்சியில் உள்ள 10 பேர் அணி காத்திரமானதொரு முடிவை எடுக்கும் எனவும் லலித் எல்லாவல திட்டவட்டமாக அறிவித்தார். (அ)





# யாழ்.பிரதேச செயலக எற்பாட்டில் முதற் தடவையாக இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதற்தடவையாக மாபெரும் இப்தார் நிகழ்வு ஒன்று கடந்த 26ஆம் திகதி யாழ். பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வரலாற்றில் முதற் தடவையாக இதுவே யாழ்.பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாபெரும் இப்தார் நிகழ்வு ஆகும். இந்த இப்தார் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் விசேட இப்தார் உரைகளை மௌலவி எம்.ஏ.பைசர் (மதனி - யாழ் மர்யம் மஸ்ஜித்), மௌலவி றழீம் (யாழ் புற நகர் மஸ்ஜித்) மற்றும் ஜனாப் எஸ்.எம். நிஸ்தாக் (யாழ் மாவட்ட முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர்) உள்ளிட்டோர் நிகழ்த்தினர்.

இவ் இப்தார் நிகழ்வில் யாழ் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிககள், முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள், மகளிர் அமைப்புக்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், முஸ்லிம் வர்த்தகர்கள், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள், இளைஞர்கள் உள்ளிட்ட நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)



# யாழ். பல்கலை சமூகம் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பன நேற்று வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டன.

ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி விலக கோரி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் நேற்று பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டன.

இந்தப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்.பல்கலைகழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பன யாழ்.பல்கலைகழக முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டன. (அ-03)

# பிரதி சபாநாயகர் பதவிக்கு மும்முனையில் போட்டி?

கொழும்பு, ஏப். 29

பாராளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு முன்முனை போட்டி நிலவக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரதிச் சபாநாயகர் பதவியை வகித்த ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கடந்த 22 ஆம் திகதியுடன் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார்.

இது தொடர்பான கடிதம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 04 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது முதல் தேர்வாக, பிரதிச் சபாநாயகர் தெரிவு இடம்பெற வேண்டும்.

ஒருவரின் பெயர் முன்மொழியப்பட்டால் ஏகமனதாக தெரிவு இடம்பெறும். இருவர் போட்டியிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன்படி ஆளுங்கட்சியின் சார்பில் டிலான் பெரேராவும், 11 கட்சிகளின் சார்பில் அநுர பிரியதர்சன யாப்பாவும் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு போட்டியிடக்கூடும். மறுபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் உறுப்பினர் ஒருவரை நிறுத்தக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தமிழகம் சென்ற இளைஞர்கள் மீது போதைப்பொருள் கடத்தல் வழக்கு?

யாழ்ப்பாணம், ஏப். 29

குருநகர் பகுதியில் இருந்து தமிழகம் சென்ற இரு இளைஞர்கள் மீதும் இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமையால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குருநகர் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் தமிழகம் , தனுஷ்கோடியை அண்மித்த தொண்டி பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தமிழக கடலோர பாதுகாப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் கோரி வந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது , குறித்த இருவருக்கும் எதிராக இலங்கை நீதிமன்றில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால் இருவரையும் அகதிகளாக ஏற்காமல் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (அ-03)



# குருநகரில் இருந்து இருவர் நேற்று தமிழகத்தில் தஞ்சம்!

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கடல் வழியாக தமிழகம் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், குருநகர் கடற்கரை வீதியை சேர்ந்தவர்களான ஜெயசீலன் சீலன் மற்றும் வினோத் அருள்ராஜ் ஆகிய இரு இளைஞர்களே தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த இருவரும் நேற்று முன்தினம் புதன்கிழமை குருநகர் பகுதியில் இருந்து படகொன்றின் மூலம் சென்று, நேற்று அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் கரையிறங்கியவேளை தமிழக கடலோர பாதுகாப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக யாழ்ப்பாணம் , மன்னார் கடற்பரப்புக்கள் ஊடாக தமிழகம் சென்று தஞ்சமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் 22ம் திகதியில் இருந்து இன்று வரை 77 இலங்கையைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக தமிழகத்துக்கு சென்றுள்ளனர். (அ-03)



கனடாவாழ் தமிழ் எழுத்தாளரான அருண் செல்லப்பாவின் "நினைத்தாலே இனிக்கும்", "அவளுக்க என்று ஒரு மனம்", "சொல்லத்தான் நினைக்கிறேன்" ஆகிய மூன்று நாவல்கள் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. நூல்களை அம்பாறை மாவட்ட இளைப்பாறிய மேலதிக அரச அதிபர் இராமகிருஷ்ணன் செல்லத்துரை வெளியிட்டு வைப்பதையும் நூலாசிரியர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மஹிந்த ஒருபோதும் பதவி விலகமாட்டார்

## சி.பி.ரத்நாயக்க திட்டவட்டம்

**கொழும்பு, ஏப். 29**

**"எமது தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எந்தச் சந்தர்ப்பத்திலும் பதவி விலகமாட்டார்."**

**- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.**

பிரதமரைப் பதவி விலகக் கோரும் சுயாதீன எம்.பிக்கள், தேர்தல் மேடைகளில் அவரின் படத்தை ஏந்தியவாறு பிரசாரம் செய்துதான் வெற்றியடைந்தார்கள் என்பதை மறக்கக்கூடாது எனவும் அவர் நினைவுபடுத்தினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச சபைத் தவிசாளர்கள், நகர சபைத் தலைவர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரத்நாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்துவதில் சிலர் குறியாகவுள்ளனர். அவர்களின் சுயலாப அரசியல் எளிதில் எடுபடாது.

சிறீலங்கா பொதுஜன முன்னணியிலிருந்து எவர் வெளியேறினாலும் எமது கட்சி பலம் இழக்காது.

எமது தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கைகளை நாம் தொடர்ந்து பலப்படுத்துவோம். அவரைப் பதவி விலகக் கோர எவருக்கும் உரிமை இல்லை. கொடிய பயங்கரவாதத்திலி ருந்து நாட்டை மீட்ட ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ஷவே -என்றார். (அ)



# மன்னார் மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு

மன்னார், ஏப். 29

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்துடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நோன்பு திறக்கும் நிகழ்வில் சர்வமத தலைவர்கள், வட மாகாணத்தின் பிரதம செயலாளர், மன்னார் மாவட்ட செயலாளர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி,பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்கள், மதத்தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வ மத தலைவர்களின் ஆசிச் செய்தி வழங்கப்பட்டது.

மேலும் நோன்பு திறக்கும் நிகழ்வு இடம் பெற்றதோடு, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விலையேற்றத்தை கண்டித்து வடமராட்சியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 29

வடமராட்சி - வல்வெட்டித்துறை நகர் பகுதியில் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் வல்வெட்டித்துறை கிளையினரால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், எரிவாயு விலையினை அதிகரித்தல் உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்பத் தெரிவிக்கும் வகையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருள் விலை, எரிவாயு விலை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வலியுறுத்தும் பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஏந்தியிருந்தனர். (அ-03,2)

# ரயில் சேவைகள் முடங்கின

கொழும்பு, ஏப். 29

நாடு தழுவியதாக நேற்று முன்னெடுக்கப்பட்ட தொழிற் சங்கப் போராட்டம் காரணமாக ரயில் சேவைகள் தடைப்பட்டன.

பல ரயில் தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று வேலைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் ரயில் சேவைகள் தடைப்பட்டுள் ளனதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# துறைமுக நகருக்குள் சென்ற 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள்

## தீவிர விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 29

பொலனறுவைப் பகுதிக்கு எரிபொருளை எடுத்து சென்ற தாங்கி ஊர்தி ஒன்று கொழும்புத் துறைமுக நகரத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில் பெற்றோலியக் கூட்டுதாபனம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தற்போது குறித்த தாங்கி கொலன்னாவை எரிபொருள் மொத்த களஞ்சிய முனையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த தாங்கி 33,000 லீற்றர் எரிபொருளுடன் கடந்த 25ஆம் திகதி பொலனறுவை அரிசி ஆலைக்கு கொண்டு செல்லப்படவிருந்தது.

எனினும் அது கொழும்புத் துறைமுக நகரத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில் கொலன்னாவை எரிபொருள் மொத்த களஞ்சிய முனையத்துக்கு தகவல் கிடைத்திருந்தது.

பின்னர் துறைமுக பொலிஸார் எடுத்த நடவடிக்கையை அடுத்து குறித்த தாங்கி கொலன்னாவை எரிபொருள் மொத்த களஞ்சிய முனையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் தாங்கி உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக குறித்த தாங்கி அங்கு கொண்டு செல்லப்பட்டதாக குறிப்பிட்டார். (அ)




# கிளிநொச்சி மாவட்டத்தில் அரச அலுவலகங்கள் பூட்டு

கிளிநொச்சி, ஏப். 29

அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியாக நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டநிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அரச திணைக்களங்கள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெற்றன.


கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

அதேவேளை தபாலகங்கள் உள்ளிட்ட சில அரச சேவைகள் இடம்பெறவில்லை.

தனியார் மற்றும் அரச பஸ்கள் வழமை போன்று சேவையில் ஈடுபட்ட அதேவேளை வர்த்தக செயற்பாடுகளும், வங்கிச் செயற்பாடுகளும் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டன. (அ-2)

# வந்தார் - சென்றார்

**மாறி வரும் உலக அரசியல் சூழலில் இந்தியாவைத் தனது பக்கம் அணிசேர்க்கும் நோக்கம் பிரிட்டன் பிரதமரின் வருகைக்கு இருந்தது. குறிப்பாக, உக்ரைன் - ரஷ்யா மோதலில் நேட்டோ நாடுகளின் நிலைப்பாடுகளுக்கு எதிராக ரஷ்யாவுடன் இந்தியா நட்புறவு கொண்டிருப்பது அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது.**



# இந்தியாவை

## தம்பக்கம் இழுக்க பிரிட்டன் பிரதமர் முயன்றார்!

பிரிட்டனின் பிரதமரான பிறகு இந்தியாவுக்கு முதல் முறையாக வருகை தந்த போரிஸ் ஜான்சன், ஏப். 21, 22 ஆகிய தேதிகளில் குஜராத் மாநிலம், அகமதாபாதிலும், புதுடில்லியிலும் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். 22-ஆம் தேதி அவரை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். பிரிட்டனில் பல்வேறு எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் பிரதமர் போரிஸ் ஜான்சனுக்கு இந்திய விஜயம் சற்று ஆறுதலை அளித்திருக்கும் என்று கருதலாம்.

தனது அரசுமுறைப் பயணத்தின்போது அகமதாபாத் சென்ற பிரிட்டன் பிரதமர், சபர்மதி ஆசிரமத்தில் நீண்டநேரம் செலவிட்டார். அதே போல, அக்ஷர்தாம் ஆலயத்திற்கும் அமைதி தேடி விஜயம் செய்தார். இந்தியா மீதும், இந்தியர்கள் மீதும் போரிஸ் ஜான்சனின் பார்வை ஏனைய ஐரோப்பியப் பார்வையிலிருந்து வேறுபடுவது புதிதொன்றுமல்ல.

மாறி வரும் உலக அரசியல் சூழலில் இந்தியாவைத் தனது பக்கம் அணிசேர்க்கும் நோக்கம் பிரிட்டன் பிரதமரின் வருகைக்கு இருந்தது. குறிப்பாக, உக்ரைன் - ரஷ்யா மோதலின் பின்னணியில் அவரது அரசுமுறைப் பயணத்தை நாம் பார்க்க வேண்டும். நேட்டோ நாடுகளின் நிலைப்பாடுகளுக்கு எதிராக ரஷ்யாவுடன் இந்தியா நட்புறவு கொண்டிருப்பது அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. இந்தியாவைத் தங்கள் அணியில் இணைக்கும் முயற்சியாக ஏற்கெனவே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இந்தியாவுக்கு வந்து பிரதமரை சந்தித்தார். அதன் நீட்சியாகத்தான் இப்போதைய பிரிட்டன் பிரதமரின் விஜயத்தையும் பார்க்கத் தோன்றுகிறது.

முன்பு போல இந்தியாவை மிரட்டிப் பணிய வைக்க முடியாது என்பதை உலக நாடுகள் தற்போது உணர்ந்து கொண்டு விட்டன. இதனை பிரிட்டன் பிரதமருடனான பேச்சுவார்த்தைகள் உறுதிப்படுத்தின. அதே நேரத்தில், ரஷ்யாவுடனான இந்தியாவின் நட்புறவு, குற்றம் சாட்ட முடியாத நிலையில் இருப்பதை பிரதமர் போரிஸ் ஜான்சன் வேறுவழியில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

“ரஷ்ய விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு அனைவருக்கும் தெரியும். ரஷ்யாவுடனான இந்தியாவின் வரலாற்று ரீதியான உறவை மதிக்கிறோம். உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்ய அதிபர் புட்டினுடன் பலமுறை தொலைபேசி வாயிலாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேசியிருப்பதை குறிப்பிட வேண்டும்.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பை ஏற்றுக்கொள்ளாத அதே வேளையில், ரஷ்யாவுடனான ஒப்பந்தங்களையும் உறவையும் இந்தியா துண்டித்துக்கொள்ள முடியாத நிர்ப்பந்தத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது” என்கிற பிரதமர் ஜான்சனின் செய்தியாளர்கள் சந்திப்பு உரை அதை உறுதிப்படுத்துகிறது.

ரஷ்ய - உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் நடுநிலைப் பார்வையை உலக நாடுகள் ஏற்கத் தொடங்கிவிட்டன என்பதை பிரிட்டன் பிரதமரின் பேச்சு உணர்த்துகிறது. இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மோடி, “உக்ரைனில் உடனடியாக போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட வேண்டும். பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமாக, தூதரக ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

அதே சமயம், அனைத்து நாடுகளின் இறையாண்மைக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று கூறியதும் குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் பிரதமரின் வருகை, இரு நாடுகளும் பல துறைகளில் கூட்டுறவை விரிவாக்கம் செய்யும் வாய்ப்புகளை உருவாக்கி இருக்கிறது. இந்த வருகையின்போது அணுசக்தித் துறை, எரிசக்தித் துறை தொடர்பான இரு முக்கியமான ஒப்பந்தங்கள் உள்ளிட்ட ஆறு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டிருக்கின்றன.

ரஷ்யாவுடனான இந்தியாவின் நெருக்கத்தைக் குறைக்க, உள்நாட்டில் போர் விமானங்கள் தயாரிக்கும் இந்திய முயற்சிக்கு உதவுவதாகவும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உறுதி அளித்திருக்கிறார். இரு நாடுகளுக்கிடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அடுத்த சில மாதங்களில் கையொப்பமாகும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

எரிசக்தி, பசுமை ஹைட்ரஜன், வர்த்தகம், ராணுவப் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம், வேலைவாய்ப்பு, விண்வெளிஆராய்ச்சி போன்ற பல துறைகளில் இந்தியாவும் பிரிட்டனும் இணைந்து செயல்படுவதற்குக் கூடுதலான வாய்ப்புகள் காணப்படுவதாகக் கூறியிருக்கிறார் வெளியுறவுத் துறை செயலர் ஹர்ஷவர்தன் ஷிரிங்லா. இதையே பிரிட்டன் பிரதமரும் தனது உரையில் குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்பம் போன்ற சில துறைகளில் பிரிட்டனில் திறமையான பணியாளர்களுக்குத் தேவை இருப்பதாகவும், அதனை இந்திய இளைஞர்களால் நிரப்ப முடியும் என்றும் அவர் கூறியிருக் கிறார்.



அது மட்டுமல்ல, பிரிட்டனின் ஒக்ஸ்போர்டு அஸ்ட்ரா செனிகா நிறுவனமும் இந்தியாவின் சீரம் இன்ஸ்டிடியூட்டும் இணைந்து கொரோனாவுக்கு எதிராக இந்தியாவில் தயாரித்த “கோவிஷீல்ட்” தடுப்பூசியையே தான் செலுத்திக் கொண்டதாகவும் போரிஸ் ஜான்சன் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

பிரிட்டன் பிரதமரின் இந்திய வருகையை, தனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்த சிறந்த வாய்ப்பாக இந்தியாவும் பயன்படுத்திக் கொண்டது. இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாத அமைப்புகள் பிரிட்டன் மண்ணிலிருந்து செயல்பட அனுமதிக்கக் கூடாது என்ற பிரதமர் மோடியின் வேண்டுகோளை பிரிட்டன் ஏற்றது.



இந்தியாவில் பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டுத் தப்பிச் சென்ற சிலர் பிரிட்டனில் அடைக்கலமாகி இருப்பதையும் இந்தியா சுட்டிக்காட்டியது.

பிரிட்டனில் படிக்க விரும்பும் இந்திய மாணவர் களுக்கு தடையில்லாத நுழைவு அனுமதி வழங்குவதில் காணப்படும் தயக்கம் இருநாட்டு உறவுகளில் தொடரும் அவநம்பிக்கையின் அடையாளம்!

# இலங்கை தொடரும் போராட்டங்கள்: சுற்றுலாத் துறையின் நிலை என்ன?

## போராட்டங்களால் பலவீனமாகிறதா?



எம். மணிகண்டன்

டொலர் கையிருப்பு குறைந்து, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, விலைவாசி உயர்ந்து விட்டதால், இலங்கையில் போராட்டங்கள் நடக்கின்றன. ஆனால் போராட்டங்கள் காரணமாகவே டொலர் வரத்து மேலும் குறையக்கூடும் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சரிவடைந்திருப்பதே இதற்குக் காரணம்.

இலங்கையில் அழகான கடற்கரைகளைப் பார்க்கலாம், வியக்க வைக்கும் சரணலாயங்களில் இயற்கையோடு இயற்கையாக விலங்குகளைக் காணலாம். இங்கு பௌத்த, இந்து மத ஆன்மிகத் தலங்களும் இருக்கின்றன.

அந்நியச் செலாவணியை நாட்டுக்குள் கொண்டு வருவதில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது இலங்கையின் சுற்றுலாத்துறை, வெளிநாடு வாழ் தொழிலாளர்கள், ஜவுளி ஆகிய துறைகளுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருக்கும் இந்தத் துறை, நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி வரவில் 13 முதல் 15 சதவிகிதம் வரையிலான பங்களிப்பை வழங்கியிருக்கிறது.

“2019-ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு முடங்கிய சுற்றுலாத்துறை 6 மாதங்களுக்குப் பிறகுதான் படிப்படியாக மீளத் தொடங்கியது. சில மாதங்களில் கொரோனா பொது முடக்கம் வந்ததால், மீண்டும் முடங்கிவிட்டது” என்கிறார், கொழும்பு நகரில் ஹோட்டல்கள் நடத்தும் இந்தியரான வின்சென்ட்.

இலங்கையின் சுற்றுலாத் துறையில் வாகன ஓட்டுநர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், உணவகங்களை நடத்துவோர், பயண வழிகாட்டிகள், பயண ஏற்பாட்டாளர்கள் என பல தரப்பினரும் அடங்கியிருக்கின்றனர்.

“இலங்கையில் சுமார் 5 லட்சம் பேர் சுற்றுலாத் துறையில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் சுற்றுலாத் துறையில் மறைமுகமாக ஈடுபட்டுள்ளோரையும் சேர்த்து மொத்தம் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்” என தெரிவித்தார் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுத் துறையின் தலைவர் கிர்மார்லி பெர்னாண்டோ.



இலங்கை வரலாற்றிலேயே சுற்றுலா உச்சத்தில் இருந்தது 2018-ஆம் ஆண்டில்தான். மொத்தம் 23 லட்சம் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தார்கள். 4.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைத்தது. அடுத்த ஆண்டிலேயே இது 3.6 பில்லியன் டாலர்களாகக் குறைந்து விட்டது.

2020-ஆம் ஆண்டில் 8 மாதங்கள் சர்வதேச விமான சேவை முடக்கப்பட்டதால், அந்த ஆண்டு வெறும் 5 லட்சம் பேர் மட்டுமே இலங்கைக்கு பயணம் மேற்கொண்டார்கள். 2021-ஆம் ஆண்டில் நிலைமை இன்னும் மோசம். கொரோனா அச்சம் காரணமாக இரண்டு லட்சத்துக்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார்கள்.

ஒரு பயணி இலங்கைக்கு வருகை தருவதன் மூலம் ஒரு நாளைக்கு சராசரியாக 170 முதல் 180 அமெரிக்க டாலர்கள் வரை இலங்கைக்கு வருமானம் கிடைப்பதாக கிர்மார்லி பெர்னாண்டோ கூறுகிறார்.

இந்தியா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள்.

இலங்கைக்கு வரும் சுமார் 46 சதவிகித சுற்றுலாப் பயணிகள் சிறிலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்களையே பயன்படுத்துகின்றனர். இதுவும் அந்நியச் செலாவணி வரும் வழியாக இருக்கிறது.

அரசு அளிக்கும் புள்ளிவிவரங்களின்படி பார்த்தால் கடந்த சில மாதங்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்திருக்கிறது. உதாரணத்துக்கு மார்ச் மாதத்தில் மட்டும் 1.06 லட்சம் பயணிகள் வந்திருக்கிறார்கள். ஆனால் ஏப்ரல் மாதத்தில் இது மீண்டும் குறைந்திருக்கிறது.

“நாட்டில் பிரச்னைகள் வரும்போது முதலில் வீழ்ச்சியடையும் துறையாகவும், கடைசியாக மீண்டுவரும் துறையாகவும் சுற்றுலா இருக்கிறது” என்கிறார் வின்சென்ட்.

2018-ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் இருந்து 4.24 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். சராசரியாக அவர்கள் 7.4 நாள்கள் இலங்கையில் தங்குகிறார்கள். அவர்கள் மூலம் சுமார் 76.3 கோடி அமெரிக்க டாலர்கள் இலங்கைக்கு வருமானமாகக் கிடைத்திருக்கிறது.

சுற்றுலாத் துறை மீண்டுவிட்டதாகக் கருதப்பட்ட கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் இந்தியாவில் இருந்து

> **“2019-ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு முடங்கிய சுற்றுலாத்துறை 6 மாதங்களுக்குப் பிறகுதான் படிப்படியாக மீளத் தொடங்கியது. சில மாதங்களில் கொரோனா பொது முடக்கம் வந்ததால், மீண்டும் முடங்கிவிட்டது” என்கிறார், கொழும்பு நகரில் ஹோட்டல்கள் நடத்தும் இந்தியரான வின்சென்ட**

55 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவை அதிகரித்த பிறகு ஏப்ரல் மாதத்தில் 24-ஆம் திகதி வரை சுமார் 7 ஆயிரம் பேர் மட்டுமே சுற்றுலாவுக்கு வந்திருக்கிறார் கள்.

“ஹோட்டல்களில் மின்சாரம் இல்லை. சாலையில் வாகனங்கள் நிற்கின்றன. உணவகங்கள் எரிவாயு இல்லாததால் மூடப்பட்டிருக்கின்றன. அறைகளில் ஏ.சி. வேலை செய்யவில்லை. எப்படி சுற்றுலாப் பயணிகள் வருவார்கள்?” என்று கேட்கிறார் பயண வழிகாட்டியாக இருக்கும் யோகேஷ்.

இந்த மாதத்தில் மட்டும் தன் மூலம் வர வேண்டிய சுற்றுலாப் பயணிகள் 200 பேர் பயணத்தை ரத்து செய்துவிட்டதாக அவர் கூறுகிறார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு வாகனங்களை இயக்கும் பணியில் ஈடுபட்டு வரும் ரம்ஜான் தனது தொழிலை முற்றிலுமாக இழந்துவிட்டதாகக் கூறுகிறார்.

“வாகனக் கடன்களுக்கு தவணைகளைத் தள்ளி வைப்பதாகக் கூறினார்கள். ஆனால் அதற்கு வட்டி அதிகமாகப் போட்டு கடன்களைக் கட்டச் சொன்னதால் என்னிடம் இருந்த இரு கார்களையும் விற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போது ஆட்டோ ஓட்டும் நிலைமைக்கு வந்துவிட்டேன்”

சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் கோரிக்கை குறித்து அரசு என்ன செய்கிறது என்ற கேட்டபோது, “கடன் தவணை பற்றி அரசு பரிசீலித்து வருகிறது” என்று கூறினார் சுற்றுலா மேம்பாட்டுத்துறைத் தலைவர் கிமார்லி.

“உண்மையில் சுற்றுலாப் பயணிகள் அச்சப்படத் தேவையில்லை. போக்குவரத்து போன்றவற்றில் சில அசவுகரியங்கள் இருக்கலாம். போராட்டங்கள் அமைதியான முறையில்தான் நடக்கின்றன. அதனால் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை” என்கிறார் அவர்.

இலங்கையின் நாணய மதிப்பு குறைந்திருப்பதால் வெளிநாட்டுப் பயணிகள் தங்களது நாணயத்தின் மூலம் சிக்கனமாக இலங்கைப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் கிமார்லி கூறினார்.





# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.



முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | (3) |  |
| 02. | (1) |  |
| 03. | (3) | C, F / B, D / A, E |
| 04. | (3) | பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம் |
| 05. | (2) | இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை. |
| 06. | (2) |  |
| 07. | (3) | யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்) |

### கல்வி tv CHANNEL-1

**29.04.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி tv CHANNEL - 2

**29.04.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தொழுநோயை கட்டுப்படுத்த மட்டக்களப்பில் நடவடிக்கை!



மட்டக்களப்பு, ஏப். 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ள தொழுநோய் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் தொழுநோய் தொற்று பரவல் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தொழுநோய் ஒழிப்பு பிரிவுடன் இணைந்து ஏ. டி. டி. நிறுவனம் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக, ஏ. டி .டி. நிறுவன பிராந்திய முகாமையாளர் ஜெபசுதன் தலைமையில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் , மதத் தலைவர்கள், கிராமமட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்று மட்டக்களப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது .

இந்த கலந்துரையாடலில் வளவாளராக மாவட்ட தொழுநோய் ஒழிப்பு பிரிவு பொது சுகாதார பரிசோதகர் வேணிதரன் கலந்துகொண்டார். (ஐ)

# அரசுக்கு எதிராக போராட்டம் சாணக்கியனுக்கு மன்று தடை!

மட்டக்களப்பு, ஏப். 29

**அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஈடுபடுவதை தடுப்பதாக பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்றுள்ளனர்.**

களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் பெறப்பட்ட இந்த நீதிமன்ற உத்தரவு நேற்று சாணக்கியன் எம். பியிடம் வழங்கப்பட்டது.

இது தொடர்பில் அவர் கருத்துரைக்கையில்,

“களவாஞ்சி பொலிஸாரினால் எனக்கு எதிராகவும், நான் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையில், என் சார்ந்தவர்கள் யார் என தெரியவில்லை. இலங்கையில் வாழும் அனைவருமே நான் சார்ந்தவர்கள்தான்.

“அவ்வாறிருக்கும்போது, 14 நாட்களுக்கு எந்தவிதமான விடயங்களும் வீதியை மறித்தோ பொதுசொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலோ எந்தவொரு விடயமும் செய்யக்கூடாது என நீதிமன்றத்தினால் ஒரு தடை உத்தரவை வழங்கியுள்ளனர்.

“இதுதான் இன்று நாட்டில் அராஜகமான நிலை, ஏனென்றால் இன்று இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலுமே மக்கள் வீதியிலேயே போராடும்போது, களவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாத்திரம் நீதிமன்ற தடை உத்தரவை எடுத்திருக்கின்றார்.



ஏனென்றால் இந்த நாட்டில் ஒரு நாடு ஒரு சட்டம் இல்லாவிட்டால் இந்த நாட்டில் தமிழர்களுக்கு இன்னுமொரு சட்டமா என்பதுதான் நீண்டகாலமாக எங்களுக்கு இருக்கின்ற கேள்வி. இதனை மீண்டும் ஒருமுறை உறுதி செய்திருக்கின்றார் களவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி.

“கோட்டா கே ஹோம் என்ற விடயம் நடைபெறும் வரை, அதாவது கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்லும் வரை இந்த போராட் டங்கள் தொடர வேண்டும். அதிலே என்னுடைய பங்களிப்பும் நிச்சம் இருக்கும்”, என்றார். (ஐ)

# வெதுப்பகங்கள், கடைகளில் சுகாதார அதிகாரிகள் சோதனை

கல்முனை, ஏப். 29

அம்பாறை - கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பனிமனையின் பணிப்பாளர் ஐ. எல். எம். றிபாஸின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்களால் வெதுப்பகங்கள், கடைகள் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.



காரைதீவு பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி தஸ்லிமா பஸீர் தலைமையில் பிரதம பரிசோதகர் வேல்முருகு மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை பரிசோதகர்களாலேயே வெதுப்பகங்கள் மற்றும் கடைகளில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, பொருட்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் வெதுப்பகங்களில் கையுறை பாவனை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இந்த சோதனை நடவடிக்கையின் போது காலாவதியான மற்றும் தரமற்ற பொருட்களை அவர்கள் கைப்பற்றியுள்ளனர். (ஐ-1)

# எரிபொருள், உர நெருக்கடிக்குள் அம்பாறையில் உழவு ஆரம்பம்!

கல்முனை, ஏப். 29

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் செய்கைக்கான உழவுவேலைகள் ஆம்பமாகியுள்ளன. இதனால், உழவுக்கான செலவும் பலமடங்கு அதிகரித்துள்ளன என்று விவசாயி கள் கவலை தெரிவித்தனர்.



கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன் வெளி , நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, சொறிக்கல் முனை, சவளக் கடை, மத்திய முகாம் ஆகிய பகுதிகளின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அர சாங்க அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக உழவு வேலைக்கென பிரத்தியேக வரிசையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், எரிபொருள் விலையேறறம் மற்றும் நெருக்கடி நிலைமைகளால் உழவுக்கான கூலியும் உயர்ந்துள்ளது. ஓர் ஏக்கர் உழுவத வற்கான கூலி 7 ஆயிரம் ரூபாய் முதல் 13 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதனிடையே, டீசல் பற்றாக்குறையால் உழவுப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தவிர, விதைப்பதற்கான கூலி ஆயிரத்து 500 ரூபாய் தொடக்கம் 2 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது. வரம்பு கட்டுவதற்கான கூலி 2 ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரத்து 500 ரூபாய் வரையும், ஒரு புசல் விதை நெல் ஆயிரம் ரூபாயாலும் அதிகரித்துள்ளன.

இதுதவிர, இரசாயன உரத்துக்கும் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால், ஒரு மூடை யூரியா 35 ஆயிரம் முதல் 44 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது என்றும் தெரிவித்த விவசாயிகள், அரசாங்கம் விவசாயிகளின் விடயங்களில் அவதானம் செலுத்தி நன்மையளிக்கும் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ஐ -1)

# பணிப் புறக்கணிப்புக்கு ஆதரவாக முடங்கியது திருகோணமலை நகரம்!

திருகோணமலை, ஏப். 29

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் தொழில் சங்க போராட்டம் காரணமாக திருகோணமலை நகரமும் ஸ்தம்பிதமடைந்தது.

மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து நேற்றையதினம் தொழில்சங்கங்கள் ஒன்றிணைந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன. இந்தப் போராட்டத்தால் திருகோணமலை நகரமும் ஸ்தம்பித்தது. சில அரச திணைக்களங்கள் இயங்காததை அவதானிக்க கூடி யதாக இருந்ததுடன் பாடசாலைகளும் மூடப்பட்டன. மத்திய மீன் சந்தை, மரக்கறி சந்தை என்பனவும் மூடப்பட்டுக் காணப்பட்டன. (ஐ)

# போதைப்பொருள் பாவனையை ஒழிக்க கல்முனையில் ரோந்து!

கல்முனை, ஏப். 29

கல்முனை பிரதேசத்தில் மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப்பொருள் விற்பனையை முற்றாக ஒழிக்கும் நோக்கில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் சாய்ந்தமருது, கல்முனை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கேரள கஞ்சா, ஹெரோயின் மற்றும் மாவா போதைப்பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளன என்று பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மத ஸ்தாபனங்கள், போன்றவையூடாக பொதுமக்கள் மத்தியிலும் போதைப் பொருள் சம்பந்த மான விழிப்பூட்டும் நடவடிக்கை களும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

பொலிஸார் கடந்த மாதம் தொடக்கம் போதைப் பொருள் பாவனையை கல்முனை பிரதேசத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் சிவில் உடையிலும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், பாடசாலை சூழலை அதிகளவில் கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பிரான்ஸ் ஜனாதிபதி மீது தக்காளி வீச்சு தாக்குதல்!



பாரிஸ், ஏப். 29

உணவு சந்தை ஒன்றில் நேற்று பொது மக்களை சந்தித்து தேர்தல் வெற்றிக்காக நன்றி தெரிவித்த ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன்மீது கூட்டத்தில் இருந்த ஒருவர் தக்காளி வீசித் தாக்குதல் நடத்தினர்.

எனினும் இந்தத் தாக்குதலில் இருந்து மக்ரோனை அவரது பாதுகாப்பு பிரிவினர் பாதுகாத்தனர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மக்ரோன் முதன்முறையாக பாரிஸின் வடமேற்கில் உள்ள செர்ஜி நகரில் உள்ள உணவு சந்தையில் வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

மக்களுடன் கை குலுக்கி நட்புடன் உரையாடிய மக்ரோன், பலருடன் இணைந்து செல்பி எடுத்துக் கொண்டார். பெரும்பாலான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்நிலையில் கூட்டத்தில் இருந்த ஒருவர் திடீரென ஜனாதிபதியை நோக்கி தக்காளிப் பை ஒன்றை வீசினார். மக்ரோனின் முதுகை நோக்கி வந்த தக்காளி பையை அவரின் பாதுகாவலர் ஒருவர் தடுத்தார்.

இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்ட போதும் மக்ரோன் அதனைக் கருத்தில் கொள்ளாது தொடர்ந்து மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இதேவேளை, மக்களின் கவலைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான மக்ரோனின் பயணம் தொடரும் என பிரெஞ்சு ஜனாதிபதி மாளிகையான எலிசி அரண்மனை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. (ஐ)

# உக்ரைன் போரில் தலையிட்டால் மின்னல்வேக பதிலடி கிடைக்கும்!

## ரஷ்ய ஜனாதிபதி மீண்டும் எச்சரிக்கை

மொஸ்கோ, ஏப். 29

**உக்ரைன் போரில் தலையிட முயற்சிக்கும் எந்தவொரு நாடும் மின்னல் வேக பதிலடியை எதிர்கொள்ள நேரிடும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீண்டும் எச்சரித்துள்ளார்.**

கணிக்க முடியாதளவு பதிலடி கொடுப்பதற்கான ஆயுதங்கள் எங்களிடம் உள்ளன. தேவைப்பட்டால் நாங்கள் அவற்றைப் பயன்படுத்துவோம் என்று நேற்றுமுன்தினம் விடுத்த எச்சரிக்கையில் அவர் கூறினார்

இது பொலிஸ்ரிக் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களின் பயன்பாடு குறித்த எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது. உக்ரைனுக்கு மேற்கத்தைய நாடுகள் பெருமளவு ஆயுதங்களை விநியோ கித்து வருகின்றன. உக்ரேனியர்கள் ரஷ்யாவை தோற்கடிப்பதை உறுதி செய்வதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவைக் கைப்பற்றும் முயற்சிகள் தோல்வி அடைந்ததை அடுத்து ரஷ்யப் படைகள் கடந்த வாரம் அங்கிருந்து வெளியேறின. தொடர்ந்து கிழக்கில் டான்பாஸ் பகுதியைக் கைப்பற்ற ரஷ்யா பெரும் தாக்குதலை நடத்தி வருகிறது. எனினும், கிழக்கிலும் உக்ரேனிய படைகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் ரஷ்யா திணறி வருகிறது. அங்கு ரஷ்யப் படைகள் கடும் இழப்புக்களை சந்தித்து வருகின்றன.



இவ்வாறான நிலையிலேயே உக்ரைன் போரில் தலையிட முயற்சிக்கும் எந்தவொரு நாடும் மின்னல் வேக பதிலடியை எதிர்கொள்ள நேரிடும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீண்டும் எச்சரித்துள்ளார்.

எங்களிடம் உள்ள ஆயுதங்கள் குறித்து நாங்கள் பெருமை பேச மாட்டோம். தேவைப்பட்டால் அவற்றைப் பயன்படுத்துவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளின் தலையீடு அதிகரித்தால் அதற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் புடின் தெரிவித்தார்.

இத்தகைய அச்சுறுத்தல்கள் உக்ரைனுக்கு உதவும் நட்பு நாடுகளை அச்சுறுத்திப் பணிய வைக்கும் புடினின் முயற்சி என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த எச்சரிக்கைகளை புறந்தள்ளி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு அதிகளவான ஆயுத உதவிகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மனிதனை பாதித்தது பறவைக் காய்ச்சல்!

பீஜிங், ஏப். 29

சீனாவில் முதன்முறையாக பறவைக் காய்ச்சல் மனிதனுக்கு பரவி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நான்கு வயது சிறுவனை பரிசோதித்த போது, பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டதாக சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"எச் 3 என் 8" திரிபு, முதல் மனித நோய்த்தொற்றை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகள் மற்றும் காகங்கள் மூலம் காய்ச்சல் பரவி உள்ளதாகவும், பெரிய அளவிலான தொற்று நோய்க்கான ஆபத்து குறைவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவனுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு தொற்று பாதிப்பு கண்டறியப்படவில்லை.

# 200 பேரைக் காப்பாற்றிய தனி ஒருவனுக்கு பாராட்டு!

கீவ், ஏப். 29

ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் துறைமுக நகரமான மரியூபோலில் இருந்து தனி ஒருவராக 200 பேரை காப்பாற்றியிருக்கிறார் அந்நாட்டைச் சேர்ந்த விடுதி உரிமையாளர் ஒருவர். அவருக்குப் பாராட்டுகள் குவிந்தவண்ணம் உள்ளன.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள மிகப் பெரிய துறைமுக நகரமான மரியூபோலை கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா சில நாட்களுக்கு முன்னர் அறிவித்தது. இந்த நிலையில் ரஷ்யப் படைகளின் தாக்குதலுக்கு நடுவே 200 பேரைக் காப்பாற்றியிருக்கிறார் அவர்.

அந்த ஆபத்தான நாட்களை நினைவு கூர்ந்த 36 வயதான மைக்கைலோ பூரிஷேவ், "மார்ச் 8 ஆம் திகதி முதல் நான் மரியூபோலுக்குள் 6 முறை நுழைந்திருக்கிறேன். சிவப்பு நிற வானில் நான் மரியூபோலில் நுழையும்போது நகரம் புகை மேகம் சூழ ஆங்காங்கே நெருப்புக் கோலமாக இருந்தது. கடைசியாக நான் சென்ற போது அங்கிருந்த கட்டடங்கள் எரிந்து சாம்பலாகி இருந்தன. எனது வானின் கண்ணாடிகள், மூன்று பக்க ஜன்னல்கள் மற்றும் ஒரு பக்க கதவு ஆகியவை ரஷ்ய ராணுவத்தால் தாக்கி அழிக்கப்பட்டன.

நல்ல வேளையாக வானில் இருந்த யாருக்கும் அடிபடவில்லை. இறைவன் காப்பாற்றிவிட்டார்." என்றார். (ஐ)

# சர்வதேச எதிர்ப்புக்கு மத்தியில் தூக்கிலிடப்பட்டார் நாகேந்திரன்!

## மன்றில் "அம்மா" என்ற அழுகுரல்



சிங்கப்பூர், ஏப். 29

சிங்கப்பூரில் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த மலேசியத் தமிழ் இளைஞர் தூக்கிலிடப்பட்டார் என்பதை உறவினர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

நாகேந்திரன் தர்மலிங்கம் என்ற அந்த நபர் 2009ஆம் ஆண்டு மலேசியாவில் இருந்து 43 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைத் தனது தொடை இடுக்கில் மறைத்து எடுத்து வந்த வேளை சிங்கப்பூர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தார். உலகிலேயே மிக இறுக்கமான சிங்கப்பூரின் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்கள் 15 கிராமுக்கு மேற்பட்ட அளவிலான ஹெரோயின் கடத்தலுக்கு மரண தண்டனையை வழங்க அதிகாரமளிக்கிறது.

நாகேந்திரன் மீதான குற்ற விசாரணைகள் கடந்த ஒரு தசாப்த காலமாக நீடித்தன. 34 வயதான அவர் வற்புறுத்தலின் பேரிலேயே ஹெரோயின் கடத்தலைச் செய்ததாக முதலிலும் பின்னர் பணத் தேவைக்காகவே அதனைச் செய்தார் என்றும் முரண்பாடான வாக்குமூலங்களை வழங்கியிருந்தார். அவரின் முதல் கூற்று குற்றத்தை மறைப்பதற்காகச் சோடிக்கப்பட்ட ஒன்று என்றும் தான் என்ன செய்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டே குற்றம் புரிந்துள்ளார் எனவும் கண்டறிந்த நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பளித்திருந்தது.

இந்த நிலையில் அவரைப் பரிசோதித்த மருத்துவ நிபுணர் ஒருவர், நாகேந்திரன் ஐ. கியூ. 69 எனப்படுகின்ற "புத்திக் கூர்மை அல்லது அறிவு சார்ந்த குறைபாடுடையவர்" என்பதைக் கண்டறிந்தார். அதனால், அவரின் வழக்கு விவகாரம் சர்வதேச மட்டத்தில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியிருந்தது. அறிவுசார் குறைபாடு (ntellectual disability) கொண்ட ஒருவருக்கு மரண தண்டனை விதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராட்டங்கள் வெடித்தன.

ஐரோப்பிய ஒன்றியமும் மரண தண்டனைக்கு எதிரான உலக இயக்கங்களும் நாகேந்திரனைத் தூக்கிலிட வேண்டாம் என்று சிங்கப்பூர் அரசிடம் கோரிக்கை விடுத்து வந்தன. ஆனால், தான் செய்தது சரியா தவறா என்பதைச் சரியாக உணர்ந்து கொள்ளக்கூடிய புத்தி உணர்வு நிலையிலேயே அவர் இருந்தார்" - என்று சிங்கப்பூர் அரசு அடித்துக் கூறியிருந்தது.

மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக்குமாறு செய்யப்பட்ட பல மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. கடைசியாக நாகேந்திரனின் தாயார் கருணை காட்டக் கோரிச் செய்த முறையீடும் நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டதை அடுத்தே சட்ட விதிமுறைகளின்படி அவர் தூக்கிலிடப்பட்டார்.

சிங்கப்பூரின் சாங்கி சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. பின்னர் அவரின் உடலை மலேசியாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடாகியுள்ளது. நீதிமன்றில் அவரின் குடும்பத்தினர் அவரின் கைகளை பற்றி இறுதி விடை கொடுத்த சமயத்தில் நாகேந்திரன் "அம்மா" என்று கதறினார் என "ரொய்ட்டர்" செய்தி சேவை தெரிவித்தது. (ஐ)

# குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு கடைசி பந்தில் “த்ரில்” வெற்றி!



மும்பை, ஏப். 29

சன்ரைசர்ஸ் அணிக்கு எதிரான போட்டியின் கடைசிப் பந்தில் “த்ரில்“ வெற்றிபெற்றது குஜராத் ரைட்டன்ஸ் அணி.

196 ஓட்டங்கள் என்ற பெரும் இலக்கை துரத்தியது குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு கடந்த சில போட்டிகள் போலவே ஷப்மன் கில் இந்தப் போட்டியிலும் சிறப்பாக ஆடவில்லை. எனினும், முந்தைய போட்டிகளைவிட சிறிதுநேரம் தாக்குப்பிடித்து ஆடினார்.

இதனால் ஆரம்ப துடுப்பாட்டம் 7வது ஓவர்கள் வரை நீடித்ததுடன், கில் மற்றும் சஹா இருவரும் முதல் விக்கெட்டுக்கு 69 ஓட்டங்கள் சேர்த்தனர். 22 ஓட்டங்கள் எடுத்திருந்த கில், உம்ரன் மலிக் பந்தில் “போல்ட்” ஆகி முதல் விக்கெட்டாக நடையைக் கட்டினார்.

இதன்பின் வந்த அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா ஆரம்பமே அதிரடியாக தொடங்கினாலும், அந்த அதிரடியைத் தொடர்ந்து தக்கவைக்கத் தவறினார். 10 ஓட்டங்களில் அவர் வெளியேற, அடுத்த வந்த டேவிட் மில்லரும் 17 ஓட்டங்களுடன் பெவிலி யன் திரும்பினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தி கொண்டிருந்த தொடக்க வீரரான விருத்திமான் சஹா 68 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, கடைசிக் கட்டத்தில் 6 பந்துகளுக்கு 22 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

கடைசி ஓவரை மார்கோ ஜேன்சன் வீசினார். அவரின் முதல் பந்தில் ராகுல் தெவட்டியா ஒரு சிக்ஸரும்ம், அடுத்த பந்தில் ஓர் ஓட்டமும் டுத்தார். துடுப்பாட்ட பகுதிக்கு வந்த ரஷீத்கான் மூன்றாவது பந்தை சிக்ஸர் அடிக்க, 3 பந்துகளுக்கு 9 ஓட்டங்களே தேவைப்பட்டது. நான்காவது பந்தை ஓட்டமற்றதாக ஜேன்சன் வீச, அடுத்த பந்தை சிக்ஸர் அடித்தார் ரஷீத். கடைசி பந்தும் சிக்ஸர் அடிக்க, கடைசி பந்தில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வென்றது. கடைசி ஓவரில் மட்டும் 3 சிக்ஸர்கள் அடித்த ரஷீத் 11 பந்துகளில் 31 ஓட்டங்களும், தெவட்டியா 40 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு பங்களித்தனர்.

உம்ரன் மலிக் வேகத்தில் குஜராத் அணி சரிந்தது எனலாம். அவர் மட்டுமே ஐந்து விக்கெட்களை வீழ்த்தினார். இதில் நான்கு விக்கெட்டுகள் போல்ட் முறையில் வீழ்த்தப்பட்டன. ஒரு விக்கெட் மட்டுமே பிடியெடுப்பு மூலம் வந்தது. ஆனால், அவரின் இந்த உழைப்பு கடைசி ஓவரில் ரஷீத் கானின் சிக்ஸர்களால் தவிடுபொடியானது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி அந்த அணிக்கு அபிஷேக் சர்மா, கேன் வில்லியம்சன் இணை தொடக்கம் கொடுத்தது. 2ஆவது ஓவரில் இந்த இணையை முஹமது ஷமி பிரித்தார். 5 ஓட்டங்களை சேர்த்திருந்த கேன் வில்லியம்சன் “போல்ட்” ஆகி வெளியேறினார்.

அடுத்த 5ஆவது ஓவரிலேயே ராகுல் திரிபாதியும் 16 ஓட்டங்களில் நடையைக் கட்டினார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 42 பந்துகளில் 65 ஓட்டங்களை குவித்த அபிஷேக் சர்மா அல்சாரி ஜோசப் பந்தில் போல்ட் ஆனார். அய்டன் மார்க்ரம் 56 ஓட்டங்களும், நிக்கலஸ் பூரண் 3 ஓட்டங்களிலும், வாஷிங்டன் சுந்தர் 3 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களை குவித்தது குஜராத் ரைட்டன்ஸ்.

சன்ரைசர்ஸ் அணி தரப்பில் முஹமது ஷமி 3 விக்கெட்களையும், யஷ் தயால், அல்சாரி ஜோசப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# உதைபந்தாட்ட உலகின் சிறந்த வீரர் நானேதான்!

## - முகமது சாலா சொல்கிறார் -

லிவர்பூல், ஏப். 29

உதைபந்தாட்ட உலகின் சிறந்த வீரர் நான்தான் என்று தான் நம்புகிறேனெனத் தெரிவித்துள்ளார் எகிப்து நாட்டு உதைபந்தாட்ட வீரர் முகமது சாலா. 2021 - 22 பிறீமியர் லீக் தொடரில் அதிக கோல்களை பதிவு செய்துள்ள வீரரும் அவர் தான்.



29 வயதான சாலா, கடந்த 2017 முதல் லிவர்பூல் உதைபந்தாட்ட கழக அணிக்காக விளை யாடி வருகிறார். இது வரையில் அந்த அணிக் காக 117 கோல்களை அவர் பதிவு செய்துள் ளார். நடப்பு சம்பி யன்ஸ் லீக் தொடரில் 8 கோல்களை பதிவு செய்துள்ளார்.

இது தவிர, லிவர் பூல் அணி நடப்பு தொடரில் கோல் பதிவு செய்ய 13 முறை உறுதுணையாக இருந்துள்ளார் சாலா. இந்நிலையில், உலகின் சிறந்த வீரரென அவர் தன்னைக் கூறியுள்ளார்.

“நான் அவரை விடவும் சிறந்தவர். இவரை விடவும் சிறந்தவர் என யாரையும் ஒப்பிட்டு சொல்லமாட்டேன். என்னைப் பொறுத்தவரையில் நான் தான் சிறந்த வீரர் என நினைக்கிறேன். நான் இதை எப்போ தும் சொல்வேன். எனக்கு நான்தான் சிறந்தவன். அதே நேரத் தில் மற்ற வீரர்களுக்கும் நான் மதிப்பு கொடுப்பேன். பலன் டி ஓர் விருதை வெல்ல வேண்டும் என விரும்புகிறேன். சம்பியன்ஸ் லீக் மற்றும் பிறீமியர் லீக் என இரு இறுதியாட்டங்களிலும் வெல்ல வேண்டும். அதனை இரண்டு, மூன்று, நான்கு முறை நான் வெல்ல வேண்டும். நாம் காண விரும்பும் கனவை காணலாம், அடைய விரும்பும் இலக்கையும் அடையலாம்” எனத் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டு பத்திரிகை ஒன்று உதைபந்தாட்ட உலகில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஆண்டுதோறும் பலன் டி ஓர் விருதை கொடுத்து வருகிறது. ஆர்ஜென்ரீனா வீரர் மெஸ்ஸி, கடந்த ஆண்டு உட்பட இதனை 7 முறை வென்றுள்ளார். (ஐ)

# ஐ. பி. எல். ரி-20 அரங்கில் அஸ்வின் புதிய மைல்கல்!



புனே, ஏப். 29

ஐ. பி. எல். கிரிக்கெட் அரங்கில் 150 விக்கெட்களை வீழ்த்திய ஐந்தாவது சுழல்பந்து வீச்சாளர் என்ற சாத னையைப் படைத்துள்ளார் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வீரர் அஸ்வின்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் பெங்களூருக்கு எதிரான போட்டியில் அவர் இந்த மைல்கல்லை எட்டினார்.

இந் தப் போட்டடயில் அஸ்வின் 3 விக்கெட்களை கைப்பற்றி னார். பெங்களூர் வீரர் ராஜாத் பட்டிதர் அஸ்வினின் 150ஆவது ஐ. பி.எல் விக்கெட் ஆனார். இதன் மூலம் ஐ. பி. எல். கிரிக் கெட்டில் 150 விக்கெட்களை கைப்பற்றிய ஐந்தாவது சுழற் பந்து வீச்சாளர் ஆகியுள்ளார்.

முன்னதாக, அமித் மிஸ்ரா (166 விக்கெட்கள்), பியூஷ் சாவ்லா (157 விக்கெட்கள்), சாஹல் (157 விக்கெட்கள்), அஸ்வின் (152 விக்கெட்கள்), ஹர்பஜன் சிங் (150 விக்கெட்கள்) ஆகியோர் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# ரியான் பராக்கால் வெற்றி கிட்டியது!



புனே, ஏப். 29

புனேயில் நடந்த ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் 39 ஆவது போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் அந்த அணியின், ரியான் பராக் 31 பந்துகளில் 56 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

வெற்றி பெற்ற அணியின் தலைவர் சஞ்சு சாம்சன் கூறும் போது, “இந்த ஆட்டத்தின் தொடக்கத்தில் முக்கிய விக்கெட்களை இழந்தோம். இருந்த போதும் தனியோர் ஆளாகப் போராடி 56 ஓட்டங்கள் குவித்து அபார மான ஆட்டத்தை ரியான் பராக் வெளிப்படுத்தினார்.

மேலும், களத் தடுப்பின்போது 4 பிடியெடுப்புகளையும் எடுத்தார். தான் ஒரு சிறந்த வீரர் என்பதை இந்த உலகுக்கு காட்டினார்” என்றார்.

# இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக ஸ்ரோக்ஸ் நியமனம்!



லண்டன், ஏப். 29

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக பென் ஸ்ரோக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பதவியில் கடந்த ஐந்து ஆண்டுகள் இருந்த ஜோ ரூட் அண்மையில் இராஜிநாமா செய்தார்.

இந்நிலையில், ஸ்ரோக்ஸ் தலைமைப் பணியைப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். இங்கிலாந்து அணியின் முன்னணி சகலதுறை வீரரான ஸ்ரோக்ஸ் அந்த அணியின் 81ஆவது தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் நியமனம், புதிய நிர்வாக இயக்குநரான றொப் கீயால் பரிந்துரை செய்யப்பட்டு, இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக ஸ்ரோக்ஸ் ஒரு டெஸ்ட் போட்டிக்கு மாத்திரம் தலைவராக இருந்துள்ளார்.

இங்கிலாந்து அணி, தற்போது 2021-2023ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் கடைசி இடத்தில் இருக்கிறது. (ஐ)

# எரிபொருளுக்காக வரிசையில் நின்றவர் மயங்கி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 29

களுத்துறை பகுதியில் உள்ள எரிபொருளுக்காக வரிசையில் நின்ற நபர் ஒருவர் நேற்று மதியம் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் களுத்துறை தெற்கு, மஹா ஹீனடியங்கல பகுதியைச் சேர்ந்த 63 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்று காலை 7 மணியளவில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறு வரிசையில் நின்றுள்ளார்.

நேற்று முற்பகல் 1 மணியளவில் குறித்த நபர் மயங்கி விழுந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், வைத்தியசாலையில் அவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
02
-
06
-
1975



மறைவு
25
-
04
-
2022

### கனகராஜா சிவகுமார்

யாழ். நெடுந்தீவு மேற்கு பெரியதுறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராஜா சிவகுமார் அவர்கள் 25.04.2022 திங்கட்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற விஸ்வலிங்கம், தெய்வானைப்பிள்ளை தம்பதிகள், காலஞ்சென்ற சுப்பிரமணியம், நவரத்தினம் தம்பதிகளின் அன்புப் பேரனும்,காலஞ்சென்ற கனகராஜா, பராசக்தி தம்பதிகளின் ஆசைப் புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,கமலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ஐஸ்வர்யா, பிரதாப் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கனகசபை, மங்கையற்கரசி, வைத்தியநாதன்- திலகவதி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு(ஆசிரியர்), கோவிந்தசாமி- யசோ, விவேகானந்தன்- கலா ஆகியோரின் அன்பு மருமகனும், பரமநாதன், காலஞ்சென்ற கமலம், பாலசிங்கம்- தவம், தில்லைநாயகி- வைத்திலிங்கம், சிவஞானவதி- கந்தவேல் ஆகியோரின் அன்புப் பெறாமகனும்,சுமதி, செல்வி, வசந்தி, விஜி, ஜெயா, சிவரூபன், அசோக், கலா, மதுரா, பிரணவன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சதீஸ், விஜயகருணன், காலஞ்சென்ற கிருபாரத்தினம், ராசலிங்கம், திலகா, நவம், காலஞ்சென்ற ராணி, ஈஸ்வரி, கருணா, வவா, காலஞ்சென்றவர்களான ஆனந்தன், லிங்கன் மற்றும் கீதா, நிதி, காலஞ்சென்ற வினோ, அன்பரசி, உதயா, ஜெயா, காலஞ்சென்ற வசந்தா, சாந்தா, சசி, திலகா, கிசோக், ஆரணி, மீனா, வாகினி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,டானியல், டனா, கஜபாபு- சரனி, யாழினி- வரன், கிரோஜினி, வினோத், கீர்த்தி, மேகலன் ஆகியோரின் தாய் மாமனும்,அஸ்வின் அவர்களின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

*அஞ்சலி*
Thursday, 28 Apr 2022 8:00 AM - 3:00 PM
Mahinda Funeral Parlour 591 Galle Road, Mount Lavinia, Sri Lanka
*கிரியை*
Thursday, 28 Apr 2022 3:00 PM
Mahinda Funeral Parlour 591 Galle Road, Mount Lavinia, Sri Lanka
*தகனம்*
Thursday, 28 Apr 2022 3:30 PM
General Cemetery, Mount Lavinia Dehiwala-Mount Lavinia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீட்டு முகவரி:*
No 1, Daya Road Hampden Lane,
Wellawatte,
Colombo-6.Live Streaming Link: Click here

*தகவல்:*
**கருணா**
**(மைத்துனர்)**

*தொடர்புகளுக்கு:*
**கமலேஸ்வரி - மனைவி** Mobile : +94773726267
**விஜி - சகோதரி** Mobile : +94761134731
**வசந்தி - சகோதரி** Mobile : +919566500439
**கருணா - மைத்துனர்** Mobile : +33620572048
**ஜெயா - சகோதரன்** Mobile : +1780885830

# நுவரெலியா நகரிலும் மாபெரும் போராட்டம்!

## அரசைப் பதவி விலகுமாறு கோரி

கொழும்பு, ஏப். 29

அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணிக்கு வலுசேர்க்கும் முகமாக நுவரெலியாவிலும் ஆர்ப்பாட்ட பேரணியொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு தெரிவித்து நுவரெலியா, நானுஓயா, தலவாக்கலை நகரங்களில் வர்த்தக நிலையங்களை மூடி வர்த்தகர்கள் ஆதரவு தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய கடைகள் மூடப்பட்டு மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படவில்லை.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் நுவரெலியா நகர வர்த்தகர்கள், ஊழியர்கள், விசேட பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள், ஊழியர்கள், பெருந்தோட்ட தொழிலாளர்கள், நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலை உதவியாளர்கள், தபால் ஊழியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட அரச திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்தும், ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ ,பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் அனைவரும் உடனடியாக அரசாங்கத்தைவிட்டு விலக வேண்டும். எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

கண்டி வீதி, உடபுஸல்லாவ வீதி, நானுஓயா வீதி வழியாக பேரணியாக சென்ற மக்கள் நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு முன்பாக ஒன்று சேர்ந்து இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)



# இலங்கைக்கு இந்தோனேசியா மருத்துவ உதவி

கொழும்பு, ஏப். 29

இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 517.5 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் மற்றும் மருந்து பொருட்களை வழங்க இந்தோனேசியா முன்வந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பற்றாக்குறையாகவுள்ள அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் தேவி கஸ்டினா டோபிங் தெரிவித்தார்.

இவ்வாறு வழங்கப்படவுள்ள 3.1 மெற்றிக் தொன் அளவுடைய மருத்துவப் பொருட்கள், இரண்டு கட்டங்களாக நாளை மற்றும் எதிர்வரும் மே 8 ஆம் திகதி ஆகிய தினங்களில் சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானங் கள் மூலம் ஜகார்த்தாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
14
-
04
-
1958



மறைவு
27
-
04
-
2022

### திருமதி சிவராசா சிவகுமாரி

வவுனியா ஓமந்தை மருதங்குளத்தைப் பிறப்பிடமாகவும், மகாறம்பைக்குளம் புளியடி பிள்ளையார் கோவில் பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா சிவகுமாரி அவர்கள் 27.04.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா, யோகப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும்,சுப்பிரமணியம் நாகமுத்து தம்பதிகளின் அன்புப் பெறாமகளும்,செல்லையா சிவராசா அவர்களின் அன்பு மனைவியும்,அனந்தகுமாரி (ஆனந்தி- ஜேர்மனி), நந்நகுமாரி (நந்தா- வவுனியா), கிருஸ்ணவேணி(அஜந்தா- பிரான்ஸ்), கஜேந்தன்(கஜன் - பிரான்ஸ்), நேருகா(நேரு- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,இராஜேந்திரன்(ஜேர்மனி), தங்கராசா (வவுனியா), சிவகுமார்(சிவா- பிரான்ஸ்), தனுகா(தனு- பிரான்ஸ்), சிறிகாந்தன்(சிறி- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவராசா(ஓமந்தை), சிவகுமார்(பிரான்ஸ்), தவகுமார்(வவுனியா), சிவஞானகி(லண்டன்), சிவமதி(வவுனியா), சிவமலர்(வவுனியா), சிவறஞ்சினி(ஓமந்தை), சிவதாஸ்(ஓமந்தை), காலஞ்சென்ற சிவ நாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தவமணி, நாகராசா, கந்தசாமி மற்றும் கலாதேவி, சிவமலர், சுஜாதா (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்லதுரை, ஜமுனா, சிவநாதன், குமரகுலசிங்கம், செல்வநாயகம், யசோதா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ஜதார்த்தனன், ஆர்த்திகா(ஜேர்மனி), சுரேன், விபீசனா (வவுனியா), சினேகா, கீர்த்திகா, அட்சிகா, அக்ஷன், நிவீனா (பிரான்ஸ்), அருநவி (பிரான்ஸ்), ஆருஷன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தகவல்:*
**கணவர், பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*தொடர்புகளுக்கு:*
**அனந்தகுமாரி (ஆனந்தி) - மகள்** Mobile : +492013162723
**கிருஸ்ணவேணி (அஜந்தா) - மகள்** Mobile : +33149608273
**சிவராசா - கணவர்** Mobile : +94778077090
**நேருகா(நேரு) - மகள்** Mobile : +33188298783
**கஜேந்தன்(கஜன்) - மகன்** Mobile : +33634455474

## வடக்கும்...

விலைகள் குறைக்கப்பட வேண்டும் நாட்டின் துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்றுகோரியே பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடைபெற்றது. அத்துடன், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் போராட்டங்கள் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் நடைபெற்றன.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டன. அரச திணைக்களங்கள் திறக்கப்பட்டபோதிலும் உத்தியோகத்தர்களின் வருகை மிகச்சொற்பளவாகவே காணப்பட்டது.

பாடசாலைகள், வங்கி சேவைகள், தபால் சேவைகள் என்பன முற்றாக முடங்கியிருந்தன. நகரப் பகுதிகளில் மக்களின் நடமாட்டம் மிகக்குறைவாகக் காணப்பட்டது.

இதேசமயம் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்ப்பாணம் நகரிலும், ஈ. பி. டி. பி. பணிமனைக்கு முன்பாகவும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் ஊழியர் சங்கத்தினர் பல்கலைக்கழகம் முன்பாகவும், யாழ். போதனா வைத்திய சாலை முன்பாக தாதியர் உத்தியோகத்தர்களும் மருத்துவர்களும் வல்வெட்டித்துறை நகரிலும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடைபெற்றன. (இவை தொடர்பான முழுமையான செய்திகள் உள்பக்கங்களில் பிரசுரமாகியுள்ளது.

**கிளிநொச்சியில்...**

தொழில்சங்கங்களின் போராட்டத்தால் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள், தபாலகங்கள் உட்பட அரச திணைக்களங்கள் முற்றாக ஸ்தம்பித்தன. தனியார் மற்றும் அரச பேருந்துகள் வழமைபோன்று சேவைகளை முன்னெடுத்தன. இதேசமயம் வர்த்தக செயல்பாடுகள் பெரியளவில் பாதிப்பின்றி முன்னெடுக்கப்பட்டது.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவு மாவட்டத்திலும் வங்கிகள், அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் சேவைகள் இடம்பெறவில்லை. சுகாதாரத் துறையிலும் அத்தியாவசிய சேவை மட்டுமே இயங்கியது. நகரப் பகுதிகளிலும் பெருமளவில் பாதிப்பு ஏற்படவில்லை. இதே சமயம் முல்லைத்தீவு நகரப் பகுதியில் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, இன, மத பேத மற்ற சமதர்ம அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டது.

**மன்னாரில்...**

மன்னாரில் அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என்பன இயங்கவில்லை. எனினும், வர்த்தக நிலையங்களும் அரச பேருந்துகளும் வழமைபோன்று இயங்கின. ஏனைய சேவைகள் இடம்பெறாமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதேசமயம் மன்னாரில் ஈ. பி. டி. பி. பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன்போது, அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினால் ஊருக்கு வரவேண்டாம் என்று மக்கள் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

**வவுனியாவில்...**

வவுனியாவில் அரச, தனியார் சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. பாடசாலைகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன. வவுனியா நகரமும் வர்த்தக நிலையங்கள் இயங்காமையால் சோபையிழந்து காணப்பட்டது. இதேசமயம், வவுனியா தொழில்சங்கங்களின் சம்மேளனம் வவுனியா மருத்துவமனையிலிருந்து பேரணியாக சென்று வவுனியா சுற்றுவட்டம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் சீன மொழியிலும் பதாகை எழுதப்பட்டமை பலரின் கவனத்தைப் பெற்றிருந்தது.

இதேசமயம், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பணிமனையை முற்றுகையிட்டும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பணிப் புறக்கணிப்பு போராட்டத்தையடுத்து கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு அதிகரித்திருந்தது. ஆர்ப்பாட்டங்களில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டாலும், பெரும்பாலான நகரங்களில் ஆயுதம் ஏந்திய படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன், புலனாய்வு பிரிவினரும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

(ஐ - 2 - 3)

## பணிப்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும், நாட்டின் துறைகளில் நிலவும் குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்றும் பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்தப் போராட்டங்கள் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டத்துக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்தன. அத்துடன், வர்த்தக சங்கங்களும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தமையால் நாடு முழுவதுமுள்ள வர்த்தக, வணிக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. எனினும், கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகளில் நோன்பு பெருநாளை முன்னிட்டு அடையாளப் போராட்டமாக இரு மணி நேரம் கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இதேநேரம், போராட்டத்துக்கு ஆதரவாக தனியார் பேருந்து சேவைகள் இயங்கவில்லை. அரச பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபட்டிருந்தமையால் போக்குவரத்து சேவையும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது.

ஆசிரியர் சங்கங்கள், பல்கலைக்கழகங்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். இதனால், பாடசாலைகளில் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்களின் வருகை பெருமளவு பாதிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன. இதேபோல, வங்கி சேவைகள், தபால் சேவைகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

அரச அலுவலகங்கள் திறக்கப்பட்டபோதிலும் உத்தியோகத்தர்களின் வருகை மிக மந்தமாகவே காணப்பட்டது. அத்துடன், சேவைகளை பெறுவதற்காக மக்களும் வராதமையால் அரச திணைக்களங்கள் பலவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேவேளை, பிரதான நகரங்களில் அந்தந்த மாவட்டங்களின் தொழில்சங்கங்கள் இணைந்து முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் அரசாங்கம் பதவி விலகவேண்டும், எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும், பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும், பொருளாதார பிரச்னைக்கு தீர்வு அவசியம், நாட்டின் தொழில் துறைகளில் நிலவும் பிரச்னைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், மக்களின் துன்பங்கள் உடன் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

போராட்டங்கள் காரணமாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பொலிஸார், ஆயுதம் ஏந்திய படையினர், புலனாய்வாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ. 550 கோடி...

அன்பளிப்பு செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில் சுகாதார அமைச்சர் கலாநிதி சன்ன ஜயசுமண அவற்றை பெற்றுக் கொண்டார். (ஐ)




# ஆர்ப்பாட்ட களத்தில் சீன மொழி பதாகை!

வவுனியா, ஏப். 29

வவுனியாவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த கூட்டுத் தொழில்சங்க போராட்டத்தில் சீன மொழியில் எழுதப்பட்ட பதாகையும் காணப்பட்டது.

நேற்றைய தினம் நாடு முழுவதும் போராட்டங்களில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி பதாகைகளை தாங்கியவாறு போராட்டங்கள் நடைபெற்றன. இந்நிலையிலேயே சீன மொழியில் எழுதப்பட்ட பதாகையும் காணப்பட்டது. நேற்றைய தினம் நாடு முழுவதும் தொழில்சங்கங்கள் போராட்டங்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நகரங்களுக்கு...

வாயு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவால் தினசரி எரிவாயு விநியோகம் 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் சிலிண்டர்களில் இருந்து 30 ஆயிரம் சிலிண்டர்களாகக் குறைக்கப்படும் என்றும், 27 சதவீத எரிவாயு நுகர்வோர் மட்டுமே எரிவாயுவைப் பயன்படுத்துவர் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில், நாட்டின் மாதாந்த எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய மாதமொன்றுக்கு 30 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதால், அவ்வாறான செலவுகளை மேற்கொள்ள முடியாது எனவும், நாட்டை மீளக் கட்டியெழுப்ப அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ)

## போராட்டக்காரர்...

களின் பணிப்புறக்கணிப்பு போராட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதனால், காலிமுகத்திடல் போராட்டத்தில் நேற்று மக்கள் குவிந்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு முகாம்கள் அமைக்கப்பட்ட நிலையில், ஊடகங்களுக்கு எதிரான குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கு என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகையும் காட்சிப்படுத்தப்பட்டு முகாமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆர்ப்பாட்டக்களத்தில் உள்ளவர்களுக்கு சட்ட வசதியை ஏற்படுத்திக்கொடுக்கம் வகையில் சட்ட ஆலோசனை மையமொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து செயல்படுகின்றது.

தவிர, ஆர்ப்பாட்டகளத்தில் பிக்கு ஒருவர் முன்னெடுத்துவரும் சத்தியாக்கிரக போராட்டமும் நேற்றைய தினம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய போராட்டத்தில் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் நேற்று கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக ஆரம்பமாக தொழில்சங்கங்களின் பேரணி நேற்று காலிமுகத்திடலை வந்தடைந்தது. இதன்போது அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஜனாதிபதி செயலகம் அருகே தொடரும் இந்தப் போராட்டம் போன்று அலரி மாளிகை முன்பாக ஆரம்பமான மைனா கோ கம போராட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

ஏனைய எதிர்க்கட்சிகளிடமும் கையொப்பங்களை சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்படுவதாக தெரிய வருகின்றது.

நம்பிக்கையில்லா பிரேரணையில் 113 கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டால் ஜனாதிபதியை நீக்குவதற்காக சட்டபூவர்வமான தன்மை இருக்காது. ஆனால், இது ஜனாதிபதிமீது நம்பிக்கையை பாராளுமன்றம் இழந்து விட்டது என்பதை தெளிவாகக் காட்டும்.

ஜனாதிபதி இராஜிநாமா செய்தால் பாராளுமன்றம் புதிய ஜனாதிபதியை நியமிக்கும் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதிமீதான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட எதிர்க்கட்சிகளையும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினரையும் நாடுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், ஜனாதிபதிக்கு எதிராக குரல் கொடுக்கும் பாராளுமன்றில் தனித்து இயங்கும் 11 கட்சியினர் இந்தப் பிரேரணையில் ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகின்றது.

இதேபோன்று சஜித் பிரேமதாஸ தரப்பிலும் சிலரே ஆதரவளிக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## ஜனாதிபதியுடனான...

இந்தத் தகவலை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று உறுதிப்படுத் தினார்.

நாட்டின் தற்போதைய பிரச்னைகள் - நெருக் கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில் சகல கட்சிகளு டனான சந்திப்புக்கு ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## ஓ.எல்., ஏ.எல்....

சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மே 23 ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அத்துடன், ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 16 ஆம் திகதியும், 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 17 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது. (அ)

## பளை விபத்தில்...

அண்மையாக நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் வடமராட்சி கிழக்கு - உடுத்துறை - தாளையடியை சேர்ந்த நாகேந்திரன் ஜெகன் என்பவரே உயிரிழந்தார்.

ஏ- 9 வீதியிலிருந்து மருதங்கேணி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கப்ரக வாகனத்துடன் மோதியதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## அமைச்சுகளுக்கான...

ஜாங்க அமைச்சர்கள் தமது விடயப் பரப்பு தொடர்பில் போதிய புரிதலின்றி உள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதனால், அமைச்சின் செயல்பாடுகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் அமைச்சர்கள் சிலரை தொடர்புகொண்டு வினவியபோது, தீர்மானங்களை எடுப்பது மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதை பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திடம் வினவிய போது, வர்த்தமானி அறிவித்தலை விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu




## அரசுக்கு எதிரான போராட்டத்தால்
# யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் வழமையான செயல்பாடு பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.29

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதவி விலக கோரி நூற்றுக்கணக்கான தொழிற்சங்கங்களின் பணி புறக் கணிப்பு காரணமாக யாழ்ப்பாணத் தில் நேற்று பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ மற்றும் தற்போதைய அர சாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி நேற்று நாடளாவிய ரீதியில் பல தொழிற்சங்கங்கள் பணிப்புறக்க ணிப்புப் போராட்டத்தை முன்னெ டுத்தன.

இதனால் யாழ். குடாநாட்டின் இயல்பு நிலை முற்றாக செயலிழந்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு தனியார் மற்றும் அரச போக்குவ ரத்து சேவைகள் மட்டுப்படுத் தப்பட்ட அளவில் இடம் பெற்றன.

பாடசாலைகள் மற்றும் வங்கிச் சேவைகள் பாதிக்கப்பட்டதோடு ரயில் சேவை, தபால் சேவைகள் என்பன முற்றாகச் செயலிழந்தன.

யாழ்ப்பாண நகரத்தின் வீதிக ளில் பொது மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்பட்டன. (அ-03)



# அரவிந்தகுமாரின் இல்லம் முற்றுகை
## கொடும்பாவியும் எரிப்பு

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலக வேண் டும் என வலியுறுத்தியும், நேற்றைய பணிபுறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் லிந்துலை மெராயா பகுதியில் நேற்று மதியம் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

லிந்துலை எல்ஜீன், லிப்பகலை, தங்ககலை, மெரயா, ஹென்போல்ட், திஸ்பனை ஆகிய தோட்டங்களை சேர்ந்த 800ற்கும் மேற்பட்ட தோட்ட தொழிலாளர்கள், இளை ஞர், யுவதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த போராட்டமானது எல்ஜீன் பிரதேசத்திலிருந்து பேரணியாக திஸ்பனை சந்தி வரை சென்று மீண்டும் போராட்டகாரர்கள் லிந்துலை மெராயா பிரதேசத்தில் உள்ள இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் வீட்டுக்கு முன்னால் போராட்டத்தை தொடர்ந்தனர்.

அவ்விடத்தில் சவப்பெட்டி, ரயர், உருவ பொம்மை ஆகியன எரித்து மலையக மக்களுக்கு துரோகம் செய்த அரவிந்தகுமார் ஒழியவேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.

இதனால் அந்தபகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற் பட்டதோடு, போக்குவரத்து சேவையும் இரண்டு மணித் தியாலயங்கள் பாதிக்கப்பட்டன. (அ)

# வடக்கில் கடல் பாசித் திட்டம் இந்தியாவுக்கு டக்ளஸ் நன்றி

கொழும்பு, ஏப். 29

யாழ்ப்பாணம், மண்டைதீவுப் பகுதியில் அடையாளப் படுத்தப்பட்ட இடங்களில் நவீன தொழில்நுட்பத் துடன் கடல்பாசி செய்கையை மேற்கொள்வது தொடர் பான கலந்துரையாடல் நேற்று இந்திய தனியார் முதலீட்டாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நடைபெற்றது.

இதன்போது இந்தியாவில் இருந்து கிடைக்கும் காலத் தின் தேவை உணர்ந்த ஒத்துழைப்புக்களை நினைவுபடுத் திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், பொருளாதார சவால்களில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது.

இந்நிலையில், இலங்கையில் காணப்படும் வளங் களை இனங்கண்டு நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் நிலையான பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கு இந்திய தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சி யளிக்கின்றது.

அந்தவகையில், மண்டைதீவு உட்பட வடக்கு மாகா ணத்தில் பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு கடல்பாசி செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் கடற்றொழில் அமைச்சு வழங்கும்" என்று தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்னாயக்கா மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர், நக்டா நிறுவனத்தின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# அரசாங்கத்தை விலக வலியுறுத்தி வேலணை சபையில் பிரேரணை!

யாழ்ப்பாணம், ஏப். 29

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆட்சி நிலவும் வேலணை பிரதேச சபை யில், ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்ச ரவை பதவி விலக வேண்டும் என்று நேற்று பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

வேலணை பிரதேச சபையின் எதிர்க் கட்சி உறுப் பினர்கள் கறுப்பு பட்டி அணிந்து சபைக்கு சென்றிருந்த னர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு , ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட் டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களின் இந்த செயல்பாடு தொடர் பில் ஆளும் கட்சி உறுப்பினர் கள் எதிர்ப்பு தெரிவித் துள்ளனர்.

எவ்வாறாயினும், பின்னர் ஆளும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் கறுப்பு பட்டி அணிந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பு நடவடிக்கையில் இணைந்தனர்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு காரண மான ஜனாதிபதியும் அமைச்சரவையும் பதவி விலக வேண் டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்த பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது.

# ஜனாதிபதியுடன் சந்திப்புக்கு சுதந்திரக் கட்சி நிபந்தனை!

கொழும்பு, ஏப். 29

தமது கட்சியால் விடுக்கப்பட்டுள்ள நிபந்தனையை ஜனாதிபதி ஏற்காதபட்சத்தில், அவர் தலைமையில் இன்று இடம்பெறவுள்ள சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டோம் - என்று சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செய லாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசிலிருந்து வெளியேறி, சுயாதீனமாக செயற்படும் முடிவை கடந்த 05 ஆம் திகதி சுதந்திரக்கட்சி எடுத்தது.

எனினும், அக்கட்சியின் சாந்த பண்டார மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் அரசுக்கு ஆதரவு வழங்கி, இராஜாங்க அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டனர்.

இவ்விருவரையும் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கு மாறும், அவ்வாறு இல்லாவிட்டால் இன்று நடைபெற வுள்ள கலந்துரையாடலில் கலந்துகொள்ளாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். சர்வகட்சி அரசு அமைப்பது சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக அரச மற்றும் சுயாதீன அணி களுக்கு ஜனாதிபதி நாளை அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# முடங்கியது மலையகம்!

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியு றுத்தி நாடு தழுவிய ரீதியில் நேற்றுப் பணிபுறக்கணிப் புப் போராட்டம் இடம்பெறும் நிலையில், இதற்கு மலையகத்தில் இருந்தும் முழு ஆதரவு வழங்கப்பட்டது.

அரசதுறை, அரசசார்பற்ற தனியார் துறை, பெருந் தோட்டத்துறை, வெகுஜன அமைப்புகள் உள்ளிட்ட பல துறைகள் கூட்டாக இணைந்தே நேற்று தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்கின.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள், மின்சார சபை தொழிற்சங்கங்கள், சுகாதார தொழிற்சங்கங்கள், துறைமுக ஊழியர்சார் தொழிற்சங்கங்கள், தபால் துறைசார் தொழிற்சங்கங்கள், பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள தொழிற்சங்கங்கள், வங்கிசார் தொழிற்சங்கங்கள் உட்பட மேலும் பல தொழிற்சங்கங் கள், பணி புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தின.

மலையகத்தில் உள்ள பிரதான இரு கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன இப்போராட்டத்துக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன.

இதற்கமைய தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலைக்கு செல்லவில்லை. வீடுகளுக்கு முன்னால் கறுப் புக் கொடிகளை பறக்கவிட்டு எதிர்ப்பை வெளியிட்டனர்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளை அண்டியுள்ள நகரங்களில் 90 வீதமான வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டிருந்தன. கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட் டிருந்தன. ஒரு சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டி ருந்தன.

அதேபோல சதொச, எரிபொருள் நிலையங்கள் திறக் கப்பட்டிருந்தன. இவற்றின் முன்னால் நீண்ட வரிசை காணப்பட்டது. பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பித்தி ருந்தன. இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. ஓட்டோ சாரதிகள் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி யிருந்தனர். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.